விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 12 வியாழக்கிழமை (26.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 'இராணுவ மயப்படுத்தல்' தமிழினத்திற்கு மிகப் பெரும் ஆபத்தாக அமையும்!

## கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தாங்கொணா துயரத்தை சந்தித்துள்ள இந் நேரத்திலாவது தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுசேர தவறுமாயின் எங்கள் நிலை மிக மோசமாகிவிடும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்றைய தினம் வலம்புரி அலுவலகத்திற்கு வருகை தந்த அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் தலைமைகள் இன்னமும் தமிழ் மக்களின் நிலைமையை புரிந்துகொள்ளவில்லை. அல்லது அதனை புரிந்து கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பெருமெடுப்பில் இசைவேள்வி நடைபெறுகின்றது. ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் எங்கள் உறவுகளின் ஒவ்வொரு வீட்டிலும் அழுகையும் கண்ணீரும் தொடர்கிறது. இந்தத் துயரத்திற்கு இன்னமும் முடிவு கட்டப்படவில்லை.

இசைவேள்வி நடத்துவதற்கோ அல்லது எங்கள் கலைஞர்கள் தங்கள் திறனை வெளிப்படுத்துவதற்கோ நான் எதிரானவன் அல்ல. தமிழ் மக்களின் அவலம் நிறைந்த இந்த வேளையில் இது தேவையில்லை. தமிழினம் உரிமையோடு சுதந்திரமாக வாழும்போது நாங்களே எங்கள் கலைத்திறத்தை வெளிக்காட்ட முடியும். அதுவே உண்மையான இசை இரசனையாக அமையும். (20 ஆம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்பு பேரவைக்கு அறிக்கை கிடைக்கவில்லை

(நியூயோர்க்)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான நிபுணர் குழு அறிக்கை மனித உரிமை பேரவையிடமும் பாதுகாப்பு பேரவையிடமும் ஒப்படைக்கப்படவில்லையென ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்க்கி தெரிவித்துள்ளார்.

நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வழிகோலும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை மற்றும் மனித உரிமைப் பேரவை ஆகியவற்றிடம் நிபுணர் குழு அறிக்கை இதுவரையில் ஒப்படைக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள் ள (20ஆம் பக்கம் பார்க்க)

# சிக்கல் நிலையில் அரசாங்கம்; பேச்சுக்கு அழைக்கிறது ஐ.தே.க!

(கொழும்பு)

**தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள் தொடர்பில், அரசாங்கம், எதிர்க்கட்சியுடன் கலந்துரையாட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.** (02ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி ஏந்தியவாறு புலிகள் சரணடைய வரவில்லை

### சரத் பொன்சேகா சாட்சியம்



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வெள்ளைக்கொடி ஏந்தி விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எவரும் வரவில்லை எனவும் யாரும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்றும் முப்படைகளின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை கூட்டமைப்பு முன்வைக்க வேண்டும்

### தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இடம் பெறுகின்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பில் கூட்டமைப்புத் தரப்பினர் நம்பிக்கையீனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ்த் தரப்பின் முக்கிய கட்சி என்ற வகையில் முக்கிய பங்கு கூட்டமைப்பிற்கே உண்டு. ஆனால் இலங்கை அரசே பேச்சுக்களை முறிக்கும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சொல்கின்றமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் தமிழ் தரப்புக்களினது கோரிக்கைகளை வலியுறுத்தும் தீர்வுத்திட்டத்தை உடனடியாக முன்வைக்க வேண்டும் என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு வேண்டுகோள் (02ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. உட்பட 13 பேரை விசாரிக்க அனுமதி கோருகிறது நெதர்லாந்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்புத் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் நெதர்லாந்து அதிகாரிகள் இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளிடம் நடத்த அனுமதி கோரியுள்ளனர்.

இது தொடர்பாக நெதர்லாந்து வானொலி வெளியிட்டுள்ள தகவலில் குமரன் பத்மநாதன் உள்ளிட்ட 13 பேரை அடுத்த மாதம் விசாரிக்க இலங்கையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் மொகான் பீரிஸுடன் நெதர்லாந்து அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இதேவேளை இந்த விவகாரம் பற்றி சாட்சியங்களை பெறுவதற்காக நெதர்லாந்து நீதவான்களும், சட்டவாளர்களும் அமெரிக்காவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

அமெரிக்காவில் இவர்கள் புலிகளின் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளில் தொடர்புடைய பிரதீபன் தவராசாவிடம் விசாரணை நடத்தவுள்ளனர்.

இவர் அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளிலும் விடுதலைப் புலிகளுக்கு வெடிபொருட்கள், இயந்திர துப்பாக்கிகள், ஏவுகணைகள், (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக்கு எதிராக ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே ஒன்று கூடிய இவர்கள் அரசுக்கு எதிராகவும் தலைமைத்துவப் பயிற்சியை இடை நிறுத்தக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார். (ச-5)

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# சமூக விஞ்ஞானப் போட்டி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தின் வலயமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.


போட்டிகள் நடைபெறும் திகதி பாடசாலைகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

மேற்குறித்த போட்டியானது நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம் சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிரியர் துரைரட்ணம் திலீப்குமார் கடந்த 20.05.2011 வெள்ளிக்கிழமை கொழும்பு மாவட்ட நீதிவான் ரஷந்த எல். ஹொடவெல முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவருக்கு அண்மையில் இலங்கை எம்.ஜி.ஆர். இரசிகர் மன்றத்தினால் நடத்தப்பட்ட சிறந்த சமூகசேவையாளர்களுக்கான கௌரவிப்பு விழாவில் கலாஜோதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர் யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு புலிகளால் எந்தத் தீங்கும் ஏற்படாது

## பழ. நெடுமாறன் அறிக்கை



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு விடுதலைப்புலிகள் ஒரு போதும் தீங்கிழைக்க மாட்டார்கள் என தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் விவகாரத்தில் மத்திய அரசின் கொள்கைக்கு எதிரான நிலையை தமிழக முதலமைச்சர் எடுப்பதை தடுக்கும் நோக்குடன் மத்திய உளவுத்துறை ஜெயலலிதாவை படுகொலை செய்ய விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டியதாக குமரன் பத்மநாதன் மூலமாக செய்தியைப் பரப்பியுள்ளது என அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலைசெய்ய பிரபாகரன் தான் திட்டம் தீட்டினார் என குமரன் பத்மநாதன் கூறியிருக்கிறார்.

ராஜீவ் படுகொலை செய்யப்பட்வுடனே, விடுதலைப்புலிகளின் சர்வதேச செயலகத்தின் பொறுப்பாளராக இருந்த தளபதி கிட்டு, இக் கொலைக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் இக்கொலை சம்பந்தமான சில உண்மைகள் தங்களுக்குத் தெரியும் என்றும் இந்திய புலனாய்வுத் துறை அணுகினால் அவற்றைத் தெரிவிக்கத் தயாராகவிருப்பதாகவும் பகிரங்கமாக அறிவித்தார்.

ஆனால் இந்திய புலனாய்வுத் துறை இறுதிவரை அவரைச் சந்தித்து அந்த உண்மைகளைப் பெற முயற்சி செய்யவில்லை.

இத்தனை ஆண்டுகாலம் கழித்து குமரன் பத்மநாதன் மூலமாக இத்தகைய பிரசாரம் செய்யப்படுவது தமிழக மக்களைக் குழப்புவதற்கான பொய்ப் பிரசாரம் ஆகும்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அண்மையில் வெளியிட்ட அறிவிப்புக்கள் மத்திய அரசை கலக்கமடைய வைத்துள்ளன. மத்திய அரசின் கொள்கைக்கு எதிரான நிலையை தமிழக முதலமைச்சர் எடுப்பது பெரிய விளைவுகளை ஏற்படுத்தி விடும் என அஞ்சும் மத்திய அரசின் உளவுத்துறை, குமரன் பத்மநாதன் மூலமாக ஜெயலலிதாவை படுகொலை செய்ய விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டியதாக செய்தியைப் பரப்பியுள்ளது என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (எ-1)

# தமிழ்ச்செல்வனின் மனைவியும் குழந்தைகளும் நிபந்தனையில் விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் மனைவி சசிரேகாவும் அவரின் இரு பிள்ளைகளும் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னி யுத்தத்தின் இறுதியில் மக்களோடு இணைந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த இவர், இரண்டு வருடங்களுக்கு மேலாக விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தார். தற்போது நிபந்தனையின் பேரில் இவரும் இவரது பிள்ளைகளும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளபோதிலும் இவரது விடுதலைக்கான நிபந்தனைகள் குறித்து எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை இக் காலப் பகுதியில் முல்லைக் கடற்பகுதியில் வைத்து கைதான கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவியும் பிள்ளைகளும் இன்னமும் விடுதலை செய்யப்படாது இராணுவ முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

தொழிற்பயிற்சியில் முதற்தர தேசிய தர சான்றிதழை வழங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவற் தொழில்நுட்பக் கற்கைக் நெறி ஆரம்பமாகவுள்ளதால் கற்க ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்பாக தங்களது சுயவிபரக்கோவையுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஏ9 வீதி, கைதடி என்ற முகவரிக்கு நேரில் வருமாறு நிலையப் பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் அறிவித்துள்ளார். (ச)

**பாலை குற்றி விற்பனைக்கு**

பாவித்த 15 அடிநீளம் 4 X 2 அங்குலம் அளவுடைய 5 பாலைக் குற்றிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு :0212227801
புதிய இல.33, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (5012)

# அரசியல் தீர்வுத்திட்...

விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம் பெற்றது. தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் சிறிகாந்தா மற்றும் செயலாளர் நாயகமான கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே சிறிகாந்தா மேற்படி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பேச்சுக்களில் நம்பிக்கை இல்லை என கூட்டமைப்பு கருதினால் அது வெளியேறிவிட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை உடனடியாக முன்வைப்பதே தற்போதைய தேவையாக இருக்கிறது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அவர்கள் வாழும் மரபுவழி தாயகத்தில் சுயாட்சியை உறுதிப்படுத்தக் கூடிய தீர்வை வைக்க வேண்டிய கட்டாயம் கூட்டமைப்புக்கு உண்டு. இனிமேலும் காலத்தை தாழ்த்தாது தீர்வுத்திட்டத்தை வைக்குமாறு கூட்டமைப்பை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியா, இலங்கை அரசை யுத்த நெருக்குவாரங்களிலிருந்து காப்பாற்றியுள்ளது. இனியும் அவ்வாறு செய்யும். இந்திய அரசை நாங்கள் கவனமாக கையாள வேண்டும். நண்பர்களிடமிருந்து நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் காப்பாற்ற வேண்டும். இன்றைய சூழல் தமிழ் மக்களுக்கு சாதகமாக உள்ளது.

பேச்சுக்கள் வெளிப்படையாக பகிரங்கமாக இருக்க வேண்டும். வீணாக பேச்சுக்களை இழுத்தடிக்காது தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதன் மூலம் இலங்கை அரசை உரிய வழி முறைக்கு கொண்டுவர சாத்தியப்படும் என அவர் தெரிவித்தார்.

தமிழ்த்தரப்பின் பிரதான கட்சியாக கூட்டமைப்பே இருக்கிறது என்பதை தமது கட்சி பூரணமாக ஏற்றுக் கொள்கின்றது என தெரிவித்த அவர், பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டமை தொடர்பாக என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் போவது வீணாவது ஐ.நா.வின் குற்றச்சாட்டு அறிக்கையிலிருந்து இலங்கை அரசை தப்ப வைப்பதற்கான வழிமுறையாகிவிடும். இந்தக் குற்றச்சாட்டுக்கு கூட்டமைப்பு உள்ளாகாது தப்பித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ச-5,6)

# சிக்கல் நிலையில்...

அவர் மேலும் கூறியதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு அறிக்கை, பல்கலைக் கழக பேராசிரியர்களின் வேதனப்பிரச்சினை மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்படுவதாக கூறப்படும் தலைமைத்துவ பயிற்சி உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில், அரசு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

இவற்றிற்கு நல்ல முடிபுகளை மேற்கொள்வதற்கும் ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கும் அரசாங்கம் எம்முடன் பேச்சில் ஈடுபட வேண்டும்.

அத்துடன் அரசாங்கத்தின் கொள்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். உள் நாட்டில் எந்தவொரு பிரிவுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடாத இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இந்தியா கூறுவதை ஏற்றுக்கொண்டு செயற்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட 13-வது திருத்தத்தை அமுல்படுத்த இடமளிக்காதவர்கள் இன்று இந்தியாவின் அழுத்தம் காரணமாக 13-வது திருத்தத்திற்கு அப்பாற் செல்லவும் தயாராகவுள்ளனர். 13-வது திருத்தம் வேண்டாம் என கூறியவர்கள் தற்போது தமது பிழைக்காக 13இற்கு அப்பால் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையில் கூட இலங்கையில் நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட முடியாத நிலைமை உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனை அரசாங்கம் இந்த நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் அரச பயங்கரவாதம் நடைமுறையில் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத் தலைமைத்துவ பயிற்சியூடாக எதிர்காலத்தில் அரச பயங்கரவாதத்திற்கான சிறந்த தொருகுழுவை தேடிக் கண்டுபிடிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

13-வது திருத்தத்தை அமுல்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தயாரான போது சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நாட்டில் இவ்வளவு இழப்புக்கள் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம். 13-வது திருத்தம் வேண்டாம் எனக் கூறியவர்கள் தற்போது தமது பிழைப்புக்காக 13இற்கு அப்பால் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. (ச-5)

**குறைந்த கட்டணத்தில் சாரத்தியப் பயிற்சி பெறுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்**

இலங்கைப் போக்குவரத்துச் சபை வடக்கு, கோண்டாவில் தலைமை காரியாலயத்தில் அமைந்துள்ள சாரத்தியப் பயிற்சி பாடசாலையில் குறைந்த கட்டணத்தில் அனைவருக்குமான மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, இரட்டைப் பாவனை வாகனம் மற்றும் பார வாகனம் போன்ற வாகனங்களுக்கான சாரத்தியப் பயிற்சி முழு நிறைவுடன் அளிக்கப்பட்டு சாரத்தியப் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். அனுமதிப் பத்திரம் பெற்றவர்களுக்கு விசேட சான்றிதழும் வழங்கப்படும். அத்துடன் அரச உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை நாட்களிலும் பயிற்சியளிக்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

பிரதான பிராந்திய முகாமையாளர்,
இபோச (வ), பலாலி வீதி,
கோண்டாவில்.
தொலைபேசி இல.
021 320 7762
021 222 2877
(சி-3291)

**காணி வீடு விற்பனைக்கு**

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் 1 1/2 பரப்பு காணி, வீடு விற்பனைக்கு உண்டு.
T.P.: 0779434061

# இன்று ஒரு தகவல்

## நாக்சேன் செய்த ஞான ஆராய்ச்சி

ஒரு தேசத்தில் ஒரு ராஜா. அந்த மன்னன் பெயர் மாலின்ட் (Malind). அந்த தேசத்தில் பெரிய துறவி ஒருவர் இருந்தார். அந்தத் துறவியின் பெயர் நாக்சேன் (Nagsen).

"அந்தத் துறவி நமது அரண்மனைக்கு வந்து ஆசிர் வாதம் செய்தால் நன்றாக இருக்கும்! " என்று அந்த மன்னன் நினைத்தான்.உடனே அவன் தூதுவன் ஒருவனை அழைத்து, துறவியை அழைத்துக் கொண்டு வருமாறு கூறினான். ஒரு தேரையும் அனுப்பினான்.

தூதுவன் சென்று துறவியைப் பார்த்து, " நாக்சேன் துறவியாரே! எங்களுடைய மன்னன் தங்களைத் தரிசிக்க விரும்புகிறார்... நான் தங்களை அரண்மனைக்கு அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறேன்! " என்று தெரிவித்தான்.

அதற்கு அந்தத் துறவி, " நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவு செய்து என்னை மன்னித்து விடு. இங்கே, "நாக்சேன் "என்று ஒருவரும் கிடையாது. அது வெறும் ஒரு பெயர் தான். அது ஒரு தற்காலிகமான முத்திரைதான்... வேறொன்றுமில்லை! " என்றார்.

" இது என்ன.. இவர் வித்தியாசமான ஆளாக இருக்கிறாரே! " என்று அவரை அழைத்துப் போக வந்த தூதுவன் நினைத்தான். பிறகு அந்தத் துறவி ராஜா அனுப்பிய தேரில் அரண்மனைக்கு வந்தார். அவருக்காக காத்திருந்த மன்னன் ஓடிவந்து, " நாக்சேன் துறவி அவர்களே! நான் உங்களை அன்புடன் வரவேற்கிறேன்!" என்று வணங்கியபடி கூறினான்.

இதைக் கேட்டவுடன் அந்தத் துறவி சிரித்து விட்டு, "நாக்சேனுக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் " நாக்சேன் " என்ற பெயருடைய யாரும் இங்கே இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! " என்றார்.

அதைக் கேட்ட மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. எனவே அவன், "துறவியாரே...நீங்கள் புதிர் போட்டு பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள்...நாக்சேனாக இல்லையானால்... என்னுடைய அழைப்பை இப்போது ஏற்றுக் கொண்டிருப்பது யார்? இந்த வரவேற்புக்கு பதில் சொல்லிக் கொண்டிருப்பது யார்? " என்று வினவினான்.

உடனே அந்த துறவி பின்னால் திரும்பிப் பார்த்தார். அவர் ஏறி வந்த தேர் அங்கே நின்று கொண்டிருந்தது.

" இது தானே நான் ஏறி வந்தத் தேர்? " என்று கேட்டார். ஆமாம் என்றார்கள். " அதில் பூட்டியிருக்கும் குதிரைகளை அவிழ்த்து விடுங்கள் " என்றார் துறவி.

அவர் சொன்னது போல் குதிரைகளை அழைத்து விட்டார்கள். துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி, " இது தான் நான் ஏறி வந்த தேரா? " என்றார். இல்லை, இது குதிரை. இது எப்படி தேர் ஆக முடியும் என்றார்கள்.

"சரி... குதிரையை அங்கிருந்து ஓட்டிக் கொண்டு போங்கள்... அது பூட்டியிருந்த நுகத்தடியை எடுங்கள் " என்றார் துறவி. அவர் சொன்னது போல் நுகத்தடியை எடுத்தவுடன் " இந்த நுகத்தடிதான் குதிரையா " என்றார். " இல்லை " என்றார்கள்.

பிறகு துறவி அதன் சக்கரங்களைச் சுழற்றும்படி கூறினார். இப்படியே துறவி, தேரின் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து எடுக்கச் சொல்லி... "அதுதான் தேரா? " என்று கேட்க, இல்லை என்று அருகிலிருந்தவர்கள் பதில் கூறினர்.

கடைசியில் ஒவ்வொன்றாக எல்லாற்றையும் பிரித்து எடுத்தபின் அங்கே ஒன்றுமே இல்லை.

அப்போது அந்தத் துறவி, " இப்போது உங்களது தேர் எங்கே போயிற்று? அதிலிருந்து எடுத்த ஒவ்வொரு பகுதியும், "இது தேர் இல்லை... இது தேர் இல்லை " என்று சொல்லி விட்டீர்கள்... அப்படியானால் தேர் எங்கே? அது இப்போது எங்கே இருக்கிறது" என்று கேட்டார். மன்னனுக்கு பதில் தெரியவில்லை.

அப்போது அந்தத் துறவி பின்வருமாறு கூறினார்.

" தேர் என்று தனியாக ஒன்றும் கிடையாது... அது போலவே 'நான்' என்று தனியாக நமக்குள்ளே ஒன்றும் கிடையாது. நம் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அகற்றிப் பாருங்கள்... கடைசியிலே ஒன்றும் இருக்காது. அன்பு என்பது இந்த ஒன்றுமில்லாத தன்மையில் கடவுள்!" என்று கூறி முடித்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் கடன் வழங்குவதற்கான நேர்முக விசாரணை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சின் புனர்வாழ்வு அதிகாரசபை இலங்கை வங்கியுடன் இணைந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுய தொழில் கடன் வழங்குவதற்கான நேர்முக விசாரணை நிகழ்வை நடத்தவுள்ளன.

இதற்கமைய மருதங்கேணி சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சங்கானை, வேலணை, காரைநகர் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 28 ஆம்திகதி சனிக்கிழமை 8.30 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நேர்முக விசாரணை நடைபெறவுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே இந்நிகழ்விற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறிகயதீர, அரச உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி சபைப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் மு. நகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டத்துக்கு பொதுச்சபை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு வைத்தியசாலையின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (ஸ்ரீ-29)

# மதுபோதையில் வாகனத்தை செலுத்திய நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

மது போதையில் வாகனத்தைச் செலுத்தியதாக மந்துவிலை சேர்ந்த நபரொருவரை கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கை விசாரித்த நீதிபதி, சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-29-24)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60-70 | 50 | 90 |
| தக்காளி | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 70-80 | 80 | 80 |
| கரட் | 60-70 | 100 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 |
| புடோல் | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 45 | 50 | 50 |
| பாகற்காய் | 45 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 80 |
| பயற்றங்காய் | 20 | 20 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 70 |
| பீற்றூட் | - | 70 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 110 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 |
| போஞ்சி | - | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

**26.05.2011**

**(வைகாசி 12,வியாழக்கிழமை)**

**சூரியஉதயம் காலை 5.53 மணிக்கு**

**நவமி மாலை 5.53 மணிவரை**

**பூரட்டாதி பின்னிரவு 2.46 மணிவரை**

**இராகுகாலம் 1.22-2.52 மணிவரை**

**சுபநேரம் 7.22-8.52 மணிவரை**

**மேடம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்** தூரதேசத் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும், வளர்ச்சியும் ஏற்படும், மனையில் சுபநிகழ்வுகள் ஏற்படுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், திடீர்பயணங்களால் நன்மையுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்திணைவர்.

**கடகம்** இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும்.

**கன்னி** தொழில் முன்னேற்றமுண்டு, கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுக்காகும், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகமுண்டு, எதிரிகள் உதிரியாகும் நாள்.

**துலாம்** பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் வந்து சேரும், தொழிலில் பதவியுயர்வு வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமையடைய வேண்டிய நாள்.

**விருச்சிகம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசமான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, சொத்து வாங்கும் முயற்சி வெற்றியளிக்கும்.

**தனுசு** நீண்ட நாளைய பிரச்சனைகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், அயலவருடன் பாசமழையில் நனைவீர்கள், உடன் பிறப்புக்களால் ஆதாயமுண்டு.

**மகரம்** எதிர்கால நன்மைகருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்** விரயங்கள் கூடும் நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்கு ஆளாக நேரிடும், மூத்த சகோதரர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பார், வருமானம் திருப்தி தரும்.

**வளவன்**

# பேராற்றிலிருந்து வவுனியா நகருக்கான குடிநீர் திட்டத்தை வேறிடத்திற்கு மாற்ற கோரிக்கை

## விவசாய அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கட்டையார்குளம், சாஸ்திரிகூழாங்குளம் ஆகிய பகுதிகளில் பேராற்றை (பறங்கியாறு) மறித்து வவுனியா நகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற திட்டத்தினால் பெரும் பகுதி விவசாய நிலங்களும் குடியிருப்புப் பகுதியும் பாதிக்கப்படும் என்பதனால் அந்தத் திட்டத்தை வேறிடத்துக்கு மாற்றுமாறு விவசாய அமைப்புகளும் பொது அமைப்புக்களும் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தினால் பாதிக்கப்படவுள்ள கட்டையர்குளம், சாஸ்திரிகூழாங்குளம், புதுக்குளம், பண்டாரப்பெரியகுளம், ஓடாவிசின்னக்குளம், பாவற்குளம், தேவர்குளம், பறநாட்டினகல் போன்ற பாரிய விவசாய கிராமங்களைச் சேர்ந்த விவசாய மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் வவுனியா செயலகத்திற்கு தமது கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளுடன் சென்று ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட இந்த மகஜரை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருஞானசம்பந்தரிடம் கையளித்துள்ளனர்.

இந்த மகஜரின் பிரதிகள் வவுனியா மாவட்ட தேசிய நீர்வழங்கல் சபை உயரதிகாரிகள், பிரதேச செயலாளர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# தனியார் துறை ஓய்வூதிய சட்டத்தின் மூலம் 61 இலட்சம் பேர் பயனடைவர்

## ஓய்வூதிய கொடுப்பனவுப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான உத்தேச ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான திருத்தச்சட்டம் குறித்த துறையைச் சார்ந்த ஊழியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரட்ண தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 61 இலட்சம் பேர் நன்மை அடையவுள்ளனர் என அவர் தெரிவித்தார். இது தொடர்பாக சரியான தெளிவின்மையாலேயே சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் எனவும் குறுகிய நன்மைகளை மாத்திரம் கவனத்திற் கொண்டு இத்தகையோர் செயற்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கான நன்மைகளை ஊழியர்கள் இழக்கமாட்டார்கள் எனவும் இந்த நன்மைகளுக்கு மேலதிகமாக ஊழியர் ஓய்வூதியம் கிடைக்கிறது. ஓய்வூதியத்தின் மூலம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நன்மையடைய முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். அரசாங்கத்தின் ஓய்வூதியத்தின் மூலம் 4இலட்சத்து 76 ஆயிரம் மக்கள் மாத்திரமே நன்மையடைகின்றனர் என்றும் இதற்காக அரசாங்கம் 108 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நிர்வாக சேவை அதிகாரிகளுக்கும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட்டது

## அரசசேவை சிரேஷ்ட நிர்வாக அதிகாரி தெரிவிப்பு

நிர்வாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அதிகாரிகளுக்கு தலைமைத்துவம் மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டதாக அரச சேவை சிரேஷ்ட நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டில் தாம் புதிய நிர்வாக அதிகாரியாக அரசசேவையில் இணைந்து கொண்டபோது கட்டுக்குறுத்தைப் பொலிஸ் பயிற்சி வித்தியாலயத்தில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்டதாக ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ கே.கனேவல தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சியின்மூலம் தாம் பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார். பல்கலைக்கழக மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சி வேலைத்திட்டம் அவர்களது ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தகவல் துறையின் முன்னாள் பணிப்பாளரும் தற்போது தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமுமான ஆரியரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில், 1975ஆம் ஆண்டு தாம் அரச நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட போது இத்தகைய தலைமைத்துவப் பயிற்சியில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததாக தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மீன்களில் கதிரியக்கத் தாக்கம் குறித்த ஆய்வுகள் ஆரம்பம்

நாட்டின் கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்கள் கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக ஆய்வுகளை அணு சக்தி அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

பேலியகொட மீன் சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீன்களின் ஒரு தொகுதியை இவ்வாறு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அணு சக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்தார்.


மீன்களின் மாதிரிகளை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தமது அதிகாரிகள் மீன் சந்தைக்குச் சென்று பெற்றுக்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

தலபத் கெலவல்லா போன்ற தெரிவுசெய்யப்பட்ட சில மீன்வகைகள் இவ்வாறு ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளதாக அணு சக்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.


ஜப்பான் புகுஷிமா அணு உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்பினைத் தொடர்ந்து அங்கு கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்பட்டமையே மீன்களை பரிசோதனைக்குட்படுத்துவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2011

## வினா-விடைப் போட்டி பரிசளிப்பு விழா




சண்ரெல் வழங்கிய தினமொரு பரிசிலை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதனுடன் இணைந்து சண்ரெல் யாழ்ப்பாண விற்பனை அதிகாரி கே.மயூரன் வழங்கிவைத்த போது...



தினமொரு பரிசிலை பிரதமவிருந்தினருடன் இணைந்து வலம்புரியின் பிரதம ஒப்புநோக்குநர் க.லோகநாதன் வழங்கி வைத்த போது...



தினமொரு பரிசிலை பிரதம விருந்தினருடன் இணைந்து தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் வழங்கிவைத்த போது...



தொடரும்...

# யாழ். சிறைச்சாலையில் கைதிகளின் உண்ணாவிரதம் இடைநிறுத்தம்





(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த 8 தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளிக்கப் பட்டதையடுத்து உண்ணாவிரதம் இடைநிறுத் தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்கவின் அறிவுறுத் தலுக்கு அமைய இந்து, பௌத்த கலாசார பேரவையின் செயலாளரும், இயுலங்கா போரம் நிறுவனத்தின் தலைவருமான எம்.ரி. எஸ். இராமசந்திரனின் தலையீட்டால் இந்த உண்ணாவிரதம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கைதிகள் தங்களை விடுதலை செய்ய கோரி கடந்த 23 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந் தனர்.

குறித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை விசாரணைசெய்ய தகுந்த ஆதா ரங்கள் இல்லை என இவர்கள் மீதான வழக்கை மேல் நீதிமன் றம் தள்ளுபடி செய்து தீர்ப் பளித்தது.

ஆனால் வழக்கு முடிவுற்று 8 மாதங்கள் கடந்து சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கைதிகளின் விடுதலை தொடர்பான தேவையான ஆவணம் வராததால் தொடர்ந்தும் சிறையில் வாடவேண்டிய நிலை ஏற் பட்டுள்ளதாகவும் இதனால் தங்களை உடன் விடுவிக்குமாறு கோரியே இந்த உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக நேற்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் காமினி பண்டார மற்றும் உதவி ஜெயிலர் என். பிரபாகரனுடனும் இந்து, பௌத்த கலாசார பேரவையின் பிரதிநிதிகள் குழு மற்றும் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் இணைந்து கைதிகளுடன் சந்தித்து உரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியிடமும், நீதி அமைச்சருடனும் கைதிகளின் கோரிக்கை தொடர்பாக பேசி முடிவெடுப்பதற்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும் என கைதிகளிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து இரண்டு வாரத்திற்குள் தமது கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கத்தவறின் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்த தோடு தமது போராட்டத்தை இடைநிறுத் திக் கொண்டனர்.

இதேவேளை மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் சிறை வைக் கப்பட்டுள்ள 30 இற்கும் மேற்பட்ட கைதிக ளின் கோரிக்கையும் முன் வைத்தனர்.

அதாவது நீண்டகால மாக உறவினர்கள் எவரும் வந்து பார்வையிடாததால் அத்தியாவசிய தேவை கள் கூட தமக்கு கிடைப்பதில்லை என முறை யிட்டனர்.

இதனையடுத்து இந்து, பௌத்த கலா சாரப் பேரவையால் 30 கைதிகளுக்கும் உடை, சவர்க்காரம் போன்ற அத்தியாவசிய மான பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-6)

## வீதியில் குப்பைகளை கொட்டிய நபர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் வெவ்வேறு சம்பவங்களில் மூவருக்கு அபராதம் செலுத்த பருத்தித்துறை நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவ தினம் குறித்த் பிரதேசத்தில் வெவ்வேறு பகுதிகளை சேர்ந்த மூவருக்கு வீதிகளை அசுத்தப்படுத்தியதாகவும் வீதிகளில் போக்குவரத்துக்ளு இடையூறு விளைவிக்கும் வகையில் குப்பை மற்றும் கற்களை கொட்டிய மூவருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொஸிஸார் நேற் றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தி னார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்து மூவரும் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாக கண்டு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-24)

# தனியார் ஓய்வூதியச் சட்டம் சமர்ப்பிக்கப்படுமானால் தலைநகரை ஸ்தம்பிக்கும் முற்றுகைப் போராட்டம்

## அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

தனியார் துறைக்கு ஓய்வூதியம் என்ற பெயரில் ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். ஆகிய நிதிகளின் மீது கை வைக்கும் ஏமாற்றுத் திட்ட சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுமானால் அதே தினத்தில் தலைநகரின் இயல்பு நிலையை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் முழு நகருமே முற்றுகையிடப்பட்டு போராட்டம் நடத்தப்படும் என அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

இந்தப் போலியான திட்டத்தை அரசு கை விடவேண்டும். அதனை நிறைவேற்றிக் கொள்ள ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் தலைநகரை முற்றுகையிடும் போராட்டத்தில் குதிப்பதற்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தயார் நிலையில் இருப்பதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரும் முன்னாள் எம்.பி.யுமான வசந்த சமரசிங்க மேலும் கூறுகையில் ,ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றை பலவந்தமாக கைவசப்படுத்தும் வகையிலேயே தனியாருக்கான ஓய்வூதியம் என்ற பெயரில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இது எந்தவிதத்திலும் தனியாருக்கு பொருத் தமானதல்ல மற்றும் இந்தச் சட்டமூலத்தினூடாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கொள்ளையிடப்படுவதற்கான சந்தர்ப் பங்கள் அமைந்துள்ளன.

எனவேதான் ஏமாற்றுத் திட்டமான இந்தப் போலி ஓய்வூதியத் திட்டம் தோற்கடிப்பட வேண்டும் என்றும் அது நிறைவேற்றப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் போராட்டங்களை முன் னெடுத்துள்ளது.

தனியார் துறையினர் உள்ளிட்ட வங்கித் துறை ஊழியர்களும் இதில் பாதிக்கப்படுகின்றனர். இது அரசாங்கத்தின் இரகசியமானதொரு திட்டமாக அமைந்திருப்பதால்தான் எமது சங்கம் இது தொடர்பான தெளிவுபடுத் தல்களை மேற்கொண்டு வருகின்றது.

இன்னும் இரண்டு வாரகாலத்துக்கு மேற் படி தெளிவுபடுத்தல் நடவடிக்கை நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும்.தற்போது பிற்போடப் பட்டிருக்கின்ற மேற்படி சட்டமூலத்தை ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. எப்படியிருப்பினும் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை.

எமது எதிர்ப்புக்களையும் நாட்டின் அனைத்து தனியார் துறையினரின் எதிர்ப்புக்களையும் தாண்டி சட்டமூலத்தை சமர்ப்பிக்க முடியுமா எனச் சவால் விடுக்கின்றோம். அதனையும் மீறி சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படுமானால் அன்றைய தினம் தலைநகரை ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் தயார் நிலையில் இருக்கின்ற ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களைத் திரட்டி தலைநகர் முற்றுகையிடப்பட்டு எமது எதிர்ப்புப் போராட்டத்தை வெளிப்படுத்துவோம். எனவே அரசாங்கம் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பதுடன் மேற்படி சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுவதைக் கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றோம் என்றார். (ஸ்ரீ-2)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மீளெழுச்சி திட்டப் பணிகள்

(மிருசுவில்)

கரம்பகம் கிராம சேவையாளர் பிரிவில் (J/330) மீளக்குடியமர்ந்த மக்களுக்கான மீளெழுச்சித்திட்ட பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டார்.

இதேவேளை, இந்நிகழ்வில் 211 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ள தோடு இத்திட் டத்திற்காக 2.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-50)



2600 ஆவது புத்த ஜயந்தி தின நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மகளிர் இல்ல பிள்ளைகளுக்கு தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் வீரசிங்க உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் காலை உணவு வழங்குவதைப் படத்தில் காணலாம்.




புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...


சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ். வீதி
(தட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம். 021 222 1723

Email: nallur.saravana@gmail.com







நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா கலந்துரையாடலை நடத்துவதையும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

## பொதுக்கூட்டம்

(தனங்கிளப்பு)

பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கான பிரதேச சம்மேளன தெரிவிற்கான பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் கே.கோகிலானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் அனைத்து இளைஞர் கழக நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ-37)

## அதிபர் நியமனம்

(கரவெட்டி)

வடமராட்சி வடஇந்து மகளிர் கல்லூரியின் அதிபராக திருமதி.ரெ.நவரட்ணம் கடந்த 6 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் யாழ். வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-24)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய பாட்சாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வருகைதரும் போது தர உள்ளீட்டு முன்னேற்ற அறிக்கை (வைகாசி-2011) இன் இரண்டு பிரதிகளை தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா முன்னாள் அரச அதிபரும் வடக்கு-கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சின் செயலாளருமான சி.த.மார்க்கண்டு மற்றும் இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளர் க.மகேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் பரிசில்களைதிருமதி சீதாங்கனி மார்க்கண்டு வழங்கிக் கௌரவிப்பார். (ஸ்ரீ-19-24)

## குளவிகளால் தொல்லை

(குடத்தனை)

குடத்தனை அம்பன் பகுதியில் குளவிக் கூட்டினால் பலர் பாதிப்படைந்துள்ளனர். அப்பகுதியில் மணல் ஏற்றும் பணியில் ஈடுபடும் கூலித் தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-64)

## புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 24 ஆம் திகதி அலரிமாளிகையில் ஆசிரிய நியமனக்கடிதம் வழங்கப்பட்ட வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரர்களை (மாகாணம் மற்றும் தேசிய பாடசாலை) எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வைத்து வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சந்திக்கவுள்ளார்.

எனவே, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை நியமனக்கடிதம் மற்றும் கடமையேற்ற கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக்கலந்துரையாடலில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## காங்கேசன்துறை தில்லைக்கத்தி ஒழுங்கை மக்களின் பாவனைக்காக திறந்து வைப்பு

(சுன்னாகம்)

கடந்த 1996 ஆம் ஆண்டு மூடப்பட்ட காங்கேசன்துறை வீதியிலுள்ள தில்லைக்கத்தி ஒழுங்கை மக்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

வீதிக்கான பெயர்ப்பலகையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் வீதியினை 51 ஆவது பிரிவின் படைத்தளபதியும் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் சுன்னாகம் கிழக்கு கிராம அலுவலர், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் மற்றும் அவ்வீதியிலுள்ள பொது மக்கள், இராணுவத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர் (ஸ்ரீ-54)

## பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி

(தெல்லிப்பழை)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் முதற்கட்டமாக ஆண்கள், பெண்களுக்கான குழுநிலைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய போட்டிகளும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எல்லே, உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கபடி ஆகிய போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

எனவே குறித்த போட்டிகளில் பங்கு பெற்றவுள்ள இளைஞர் கழகங்களை காலை 8 மணிக்கு திருநெல்வேலி மகாத்மாஜீ சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்திற்கு வருகை தருமாறு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.ரவீந்திரன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-53)

யாழ்.செய்திகள்

## மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் 177 பேருக்கு வாழ்வாதாரக் கடன்

(பருத்தித்துறை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொருளாதார மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 177 பேருக்கு வாழ்வாதாரக் கடனுதவிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் வக்கிராயன் கிராமத்தில் 30 பேருக்கும் உடுத்துறைக் கிராமத்தில் 39 பேருக்கும் ஆழியவளை கிராமத்தில் 30 பேருக்கும் மருதங்கேணி கிராமத்தில் 30 பேருக்கும் செம்பியன்பற்று வடக்கு கிராமத்தில் 30 பேருக்கும் செம்பியன்பற்று தெற்கு கிராமத்தில் 18 பேருக்கும் முதல்கட்ட வாழ்வாதர உதவிகள் வழங்கப் படவுள்ளன.

கடனடிப்படையில் இவ்வுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (ஸ்ரீ-10)

## செயலமர்வுகள்

(அல்வாய்)

இரண்டாம் மொழி சிங்களம், நூல் நிலையம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சேவைக்கால ஆலோசகர்களுக்குமான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை யாழ்ப்பாண ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

* * * * * *

(அல்வாய்)

முறைசாராக் கல்வி, விசேட கல்வி, சமயபாடம், அழகியல் ஆகிய பாடத்துறை சார்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை யாழ்ப்பாண ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

* * * * * *

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரை புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்கள் தவறாது இலவச பாடநூல்களை தம்முடன் எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

* * * * * *

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழி, கணிதபாட செயலமர்வு எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் இலவச பாடநூல், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றை தவறாது தம்முடன் எடுத்து வருமாறு வடமராட்சி ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## ஆங்கில தினப்போட்டிகள் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திலுள்ள மூன்று கோட்டங்களிலும் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த ஆங்கிலதின எழுத்துப் போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# சிங்களமயமாக்கல் யாழில் மட்டுமல்ல...

# கொழும்பிலும் தான்



போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர், பிரித்தானியர் மற்றும் தென்னிந்தியக் குடியேற்றவாசிகளும் இலங்கையின் செழுமைக்கு உரித்துடையவர்கள் தான். அத்துடன் இவர்களைப் போலவேதான் சிங்களவர்களும் இத்தீவின் வந்தேறு குடிகளாவர். இவ்வாறு கொழும்பை தளமாகக் கொண்ட தசண்டே லீடர் ஆங்கில ஏட்டில் துசி ரணதுங்க எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தின் ஒரு நாள் நான் கவ்லொக் வீதியிலுள்ள இல்லத்தில் படுத்துறங்கி மீண்டும் காலையில் எழுந்த போது அந்த வீதியின் பெயர் எஸ்எஸ்ஜெ சிறி சம்புத்துவ ஜெயந்தி மாவத்தை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததைக் கண்ணுற்றேன்.

வாகனத்தை ஓட்டிச் செல்வோருக்கு செய்மதித் துணையுடன் வழிகாட்டும் அந்த கையடக்க கணிணியின் திரையில் இந்தளவு நீளமான வீதியின் பெயரை எப்படி தட்டெழுத்து செய்வது என்ற விடயம்தான் முதலில் என் சிந்தனைக்கு வந்தது. இத்தனை நீளமான பெயரை தட்டெழுதி முடிப்பதற்குள் நீங்கள் பாணந்துறை என்ற இடத்தை அடைந்து விடுவீர்கள் என நினைக்கிறேன்.

தெருக்களின் பெயர்களை மாற்றம் செய்கின்ற இவ்வாறான நடவடிக்கைகள் முட்டாள் தனமான செயற்பாட்டின் விளைவேயாகும்.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்கள், செய்மதித் துணை வழிகாட்டி கணிணி பற்றியோ அல்லது அது தொடர்பான வேறு சாத்தியப்பாடற்ற விடயங்கள் தொடர்பாகவோ சிந்தித்திருக்கமாட்டார்கள். மாறாக, முட்டாள்தனமாக இன, மதரீதியான ஆளும் மேலாதிக்க மனநிலை திருப்தியை மட்டுமே இவர்கள் தமது கவனத்திற் கொண்டிருப்பார்கள்.

இந்த நாட்டில் வாழும் மக்களை ஒரு இருண்ட யுகத்திற்குள் வைத்திருப்பதையே இந்த முட்டாள் தனமான செயல்களில் ஈடுபடுபவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

கொழும்பு நகர எல்லைக்குள் வாழும் சிங்களவர்கள் சிறுபான்மையினரே. அதற்குள்ளும் பௌத்த மதத்தை பின்பற்றுவோரின் தொகை மிகமிகக் குறைவானதாகும்.

இந்த கவ்லொக் வீதியில் வசிப்போரின் ஆலோசனை எவராலும் பெறப்படாமலேயே தற்போது இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவர்களது கருத்துரிமை இங்கு கணக்கெடுக்கப்படவில்லை.

கடந்த சில மாதங்களில், டிக்மன் வீதி, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை எனவும், குயில்போர்ட் கிரிஸ்சென்ற் வீதியானது பிறேமசிறி கேமதாச மாவத்தை எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதிகளில் வசிப்பவர்கள் எவருக்கும் இம்மாற்றங்கள் தொடர்பான எந்தத் தெரிவிற்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. எல்லாம் மேலிருந்து திணிக்கப்பட்டவையே.

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளரின் கீழ் சிங்கள மயமாக்கல் என்பது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பிலும்தான் தொடர்கிறது.

நாடு பூராவும் அலங்கரிக்கப்பட்டிருந்த வெசாக் பண்டிகைக்கான சிறப்பு வீதி அலங்காரங்களையும் பந்தல்களையும் காண பெருமளவான மக்கள் வாகனங்களில் உலா வந்தனர்.

இவ்வாறு மிக மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்த வாகன அணிகளின் மத்தியில் கண்டியிலிருந்து கொழும்பைச் சென்றடைவதற்கு எனக்கு ஆறு மணித்தியாலங்கள் எடுத்தன.



ஆயிரக்கணக்கான சிறுவர்களும், பெரியவர்களுமான முழுக் குடும்ப உறுப்பினர்களும் தங்கள் உயிரைக் கையில் பிடித்தபடி உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய ரக் வகை வாகனங்களின் பின்பகுதியில் பயணம் செய்வதை பார்த்தேன்.

இவற்றைக் கண்டு கொள்ளாதவாறு வேறெங்கோ பார்த்தபடி காவற்துறையினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இலங்கையைப் பொறுத்தளவில் சட்டம் மட்டுமன்றி சட்ட அமுலாக்கல் முழுமையும் கழுதைகளின் கத்தல் போலவே பயனற்றுக் காணப்படுகின்றன.

பெரியவர்களும் பெற்றோர்களும் உள்ளமர்ந்து பயணித்துக்கொண்டிருந்த வாகனங்களில் அவர்களது சிறு பிள்ளைகள் தமது கால்களை வெளியில் தொங்கப் போட்டவாறிருந்ததை நெரிசல் மிக்க கொழும்பு - நீர்கொழும்பு வீதியில், ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஏற்படக்கூடிய ஆபத்துகளை அடையாளம் காண்பதில் எவ்வித அக்கறையோ விருப்போ இன்றியேதான் இலங்கையர்கள் இருக்கிறார்கள். இப்படித்தான், இக்கொண்டாட்டத்திற்காக கவ்லொக் வீதியானது எஸ்எஸ்ஜெ மாவத்தை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதும்.

இவ்வீதியில் வாழும் பெரும்பான்மை மக்களுடன் கலந்தாலோசிக்காமல் இவ்வாறு 'பெயர் மாற்றப்பட்டதில் அல்லது தங்கள் பெரும்பான்மை ஆளும் அடையாளத்தை திணித்ததில் எவ்வித பிழையும் இல்லை என்றே இச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கருதுகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் இதையொத்த நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன. பல இந்து ஆலயங்கள் போரின் விளைவால் அழிவடைந்துள்ள போதிலும் இவற்றைக் கருத்திற் கொள்ளாத பெரும்பான்மையினர் வட கிழக்கில் பௌத்த தூபிகளை புதிதாக அமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கு இவ்வாறான செயற்பாடுகளை செய்வது சரி எனப்படுகிறது. ஆனால் அவர்கள் ஏனையோரின் உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும் என ஒரு போதும் நினைப்பதில்லை.

பாதுகாப்பு படையினரின் பங்களிப்புடனேயே இவ்வாறான புத்த விகாரைகள் பெருமளவில் கட்டப்படுகின்றன. இதை ஒத்ததாகவே தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள எஸ்எஸ்ஜெ மாவத்தையும் பௌத்த மதத்தின் மையமாக மாற்றப்படுகின்றது. இதில் அரசின் முழுமையான தலையீடும் பங்களிப்பும் உள்ளமை வெளிப்படை உண்மையாகும்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களாக இருப்பதால் தமது ஆளும் அதிகாரத்தை மக்கள் மீது செலுத்தி தமது நலனை அடைந்து கொள்கிறார்கள் இவ்வாறான அரசியல்வாதிகள் உலக துடுப்பாட்ட கிண்ணத்தில் இருந்து பௌத்த வாதம் வரையான அனைத்துச் செயற்பாடுகளிலும் தமது அதிகாரத்தை பிரயோகித்து கொள்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கலாம்.

இலங்கையின் அதிகார பீடமானது பெரும்பான்மை பௌத்தர்களிடம் கையளிக்கப்பட்டு இருப்பதால். இலங்கைத் தீவில் முழுமையான செயற்பாடுகளிலும் இவர்களது தலையீடுகள் காணப்படுகின்றன என்பதை வெளி உலகினரும் நன்கு அறிவார்கள்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் வாழும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையினர் என்ற கடலால் சூழப்பட்டு மூழ்கடிக்கப்படுகின்றனர். இங்கே. சிறுபான்மை மக்களின் அடையாளங்களும் தொலைந்து போகின்றன. போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர், பிரித்தானியர் மற்றும் தென்னிந்தியக் குடியேற்ற வாசிகளும் இலங்கையின் செழுமைக்கு உரித்துடையவர்கள் தான்.

அத்துடன் இவர்களைப்போலவேதான் சிங்களவர்களும் இத்தீவின் வந்தேறு குடிகளாவர். கத்தோலிக்கமல்லது இந்து மதம்போன்று பௌத்தமதமும் இலங்கைத்தீவில் வேற்று நாட்டவர்கலால் அறிமுகப்படுத்தப்பட்ட மதமாகும். இதனடிப்படையில், தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலத்தில் பௌத்த மதம் பரப்பப்பட்டதற்கு முதலே இலங்கைத்தீவில் இந்து மதம் நிலைபெற்றிருந்ததாக புராணக்கதைகள் கூறுகின்றன.

பிரித்தானியத் தலைவர்களது சிலைகள் நீக்கப்பட்டு, இடங்களின் பெயர்கள் மாற்றப்பட்டு இந்துக்களின் வணக்கத்தலங்கள் எடுக்கப்பட்டு அதற்குப் பதிலாக பௌத்தர்களின் விகாரைகள் புதிதாக கட்டப்பட்டு இந்த இலங்கைத் தீவு முழுவதும். பௌத்தத்தின் மேலாண்மை பரவிக் காணப்படுவதை நீங்கள் காணலாம். அண்மையில் புதுப்பிக்கப்பட்ட 100 ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட புராதன என்ற அடைமொழியுடனான நாகவிகாரையானது இவ்வாறான மாற்றங்களுக்கு சிறந்த ஒரு உதாரணம் ஆகும்.

இப்படித்தான் சங்கமித்தா இத்தீவிற்கு வந்திறங்கிய இடம் மற்றும் நாகதீப விகாரை ஆகிய இரண்டுக்கும் எவ்வித வரலாற்றுச் சான்றுகளும் கிடையாது. அவை புராதனம் வாய்ந்த இடங்களும் அல்ல. கடற்கரையில் ஒருதடியை ஊன்றி விட்டு இதுதான் விஜயன் வந்திறங்கிய இடம் என்று சொன்னால் எப்படி அதனை சான்றாக கொள்ள முடியாதோ அப்படித்தான் மேல் உள்ளவற்றின் வரலாற்றுச் சான்றுகளும் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு அரை நூற்றாண்டை தாண்டியிருக்கும் நிலையில் இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழிப் பயன்பாடு அரிதாகியிருப்பதைக் காணலாம்.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடுவதைத் தான் விரும்புவதாகவும் தமிழர் ஒருவர் தனது தரப்பு முறைப்பாட்டை சின்ன மொன் கார்டன் பொலிஸ் நிலை யத்திற்குச் சென்று தமிழில் மேற்கொள்வதுடன், தனக்கான பதிலையும் தமிழில் பெற்றுக் கொள்ள முடியும் என சஜித் பிரேமதாச கூறியிருந்தார்.

நீங்கள் தமிழ் பேசுவீர்களா என நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இல்லை எனப் பதிலளித்தார். அவ்வாறாயின் இந்நாட்டின் அதிபர் தமிழில் பேசுவாரா என மீண்டும் அவரிடம் கேட்டேன். அதற்கும் இல்லை என்ற பதிலுடன் ஆனால் அதிபர் மொழிமாற்றியின் உதவியுடன் தமிழ் மொழியில் உரையாற்றுகிறார் என அவர் மேலும் கூறினார்.

பெருந்தேசிய இன - மத மேலாண்மையின் முட்டாள்தன செயற்பாடுகளால், பல ஆயிரக்கணக்கான பறங்கியர்களும், மில்லியன் கணக்கான தமிழ் மக்களும் இந்நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு புலம் பெயர்த்தப்பட்டவர்கள் இந்நாட்டின் எதிரிகள் அல்லர். அவர்கள் இலங்கையின் குடிமக்கள். ஆனால் இவர்களை உள்வாங்க பிரதிநிதித்துவப்படுத்த இலங்கை தவறிவிட்டது.

தற்போது, ஐரோப்பிய சமூகத்தை சேர்ந்த நாடுகள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் இந்தியக் குடியரசு போன்ற நாடுகள் இந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

சஜித் பிரேமதாசாவிடம் யுத்தக் குற்றம் தொடர்பான அவரது கருத்துக்களை கூறுமாறு வினவினேன். அவர் வடக்கு லண்டனிலுள்ள மில் கில் பாடசாலையில் தான் கற்ற ஆங்கிலக் கல்வியின் அடிப்படையில், இலங்கை அரசாங்கமானது தகாத செயல்களில் ஈடுபட்டதே அன்றி யுத்தக்குற்றங்களில் ஈடுபடவில்லை எனக் கூறினார்.

தகாதசெயல்கள் மற்றும் யுத்தக்குற்றம் ஆகிய இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு என்ன என நான் அவரிடம் வினாவினேன். அதற்கு அவர் தான் தகாதசெயல்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துவதாகவும் நான் யுத்தக் குற்றம் எனப் பயன்படுத்தவில்லை எனவும் பதிலளித்தார்.

ஆகவே நாமும் இங்கே சஜித் பிறேமதாசாவைப் போல தகாதசெயல் என்ற சொல்லைப் பிரயோகிக்கலாம். அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் வாழும் இலங்கையர்கள் தமது அரசாங்கத்தின் தகாதசெயல்களால் தற்போது தமது நாடுகளில் வசிக்க முடியாத கையறு நிலையிலுள்ளனர்.

இவ்வாறான தகாதசெயல்களை ஒழித்து தமக்கான நீதியை பெற்றுத்தர வழிவகுக்குமாறு இவர்கள் தாம் வாழும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளிடம் கேட்கின்றனர்.

இதைப் போலவே, தமது சொந்த நாடான இலங்கையில் ஆட்சிபுரிபவர்களின் தகாத செயலால் அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்து வாழவேண்டியவர்களாக இலங்கையர்கள் உள்ளனர்.

சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆகியும் இலங்கை தனது சிறுபான்மை மக்களின் உரிமைகளை தட்டிக்கழித்து அவர்களைப் புறக்கணித்து அவர்களது அடையாளங்களை நிர்மூலமாக்குவதால் இந்த மக்களின் குடியுரிமையை மதிக்கத் தவறுகிறது.

பிறேமதாச ஆட்சியிலிருந்ததை விட மக்கள் தமது பிரச்சினைகளை வெளியில் சொல்வதில் மிகவும் அச்சப்படுகிறார்கள். இதனால் எந்தவொரு கலந்துரையாடல்களும் இன்றி தெருக்களின் பெயர்கள் மாற்றப்படுவதை எதிர்த்து பாதிக்கப்பட்ட அந்த மக்கள் எந்தவொரு ஆர்ப்பாட்டங்களையும் செய்ய முடியாதவர்களாக உள்ளனர். இது தான் உங்களுக்கான ஜனநாயகம். வெசாக் தினத்திலன்று சிங்கள பௌத்தர்கள் புத்த குன என ஒலி பெருக்கிகளில் பெருங் குரலில் கத்தினார்கள்.

**சண்டேலீடரில் இருந்து...**
**புதினப் பலகை**
**தமிழில் நித்திய பாரதி**

# பயங்கரவாத தடைச் சட்டம் அகற்றப்பட வேண்டும்

## ஐ.தே.க பிரதித்தலைவர் கோரிக்கை

**பயங்காரவாத தடைச்சட்டம் அகற்றப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.**

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் மூலம் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இந்தச் சட்டத்தை பயன்படுத்தி வன்முறைகள் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகளும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளினால் பிரயோகிக்கப்படக்கூடிய அழுத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லிபியாவிக்கும் எகிப்திற்கும் ஏற்பட்ட



நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கந்தபிள்ளையார் கோவிலடி செம்மணி வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கடுக்காய் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இராணுவ மாநாட்டில் 25 வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி?

எதிர்வரும் 31 ஆம் திகதி ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள போர் ஒழிப்பு தொடர்பான இராணுவ மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்காக சுமார் 25 வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உலகப்பயங்கரவாதம், தீவிரவாத அமைப்புக்கள், அரசியல் மற்றும் இராணுவத் தீர்மானங்கள், தேசத்தை கட்டியெழுப்புதல், புனர்வாழ்வு உள்ளிட்ட சில தலைப்புக்களில் கருத்தரங்கில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவுள்ளன.

வன்னிப்பிரதேசத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரின் போது மனிதாபிமான மீட்புப் பணிகள் தொடர்பில் மறைப்பதற்கு ஏதுவுமில்லை என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

போரின் போது மனித உரிமை மீறப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட தாரூஸ்மான் குழுவினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு இந்த மாநாட்டின் போது உரிய பதில் அளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் 42 நாடுகளைச் சேர்ந்த 300 பேர் கலந்து கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# போலியான பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த நபர் விடுதலை

(கொழும்பு)

போலியான பயங்கரவாதக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த நபர் விடுதலை செய்யப்பட்டார்.

சந்தேக நபரின் வாகனம் பாதுகாப்பு அமைச்சின் வாகன மொன்றுடன் மோதியதினால் இவ்வாறு போலிப் பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தெகிவளையை சேர்ந்த குலசிங்கலியனகே சந்திரசேனா என்பவரே இவ்வாறு பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நபராவர்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட போதிலும் அவை போலியானவை என்பது விசாரணைகள் மூலம் புலனானது.

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரால் இவ்வாறு போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்கிஸ்ஸ நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

பயங்கரவாதத்துடன் தொடர்புடையதாக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என்பது விசாரணைகள் மூலம் புலனாகியதாக நீதான் ருச்சிர வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் வாகனமொன்றுடன் குறித்த நபரின் வாகனம் மோதியதன் காரணமாக ஆத்திரமுற்ற பாதுகாப்பு தரப்பினர் சந்தேக நபர் மீது பயங்கரவாத குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 30 பேர் கைது

(கொழும்பு)

தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற ரயில் மறிப்பு போராட்டத்தின் போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்ததன் பின்னர் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பிரதான வீதியிலிருந்து அகற்றுவதற்கு முயற்சி மேற்கொண்ட போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களினால் தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத்தாக்குதலில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவின் வழக்கு விசாரணைகளை கண்காணிக்க அனைத்து பாராளுமன்ற ஒன்றிய பிரதிநிதிகள் வருகை

(கொழும்பு)

அனைத்து பாராளுமன்ற ஒன்றியப் பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணை தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ளும் நோக்கில் குறித்த பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றிய பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் தொடர்பில் தமக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீதான தாக்குதல் சுதந்திர தினமன்று சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பிர்களான தயாசிறி ஜயசேகர, ரோசி சேனாநாயக்க, ரவி கருணாநாயக்க, கரு ஜயசூரிய ஆகியோர் மீதான தாக்குதல் ஆகிய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றிய பேரவையின் செயலாளர் இன் போர்க் செவாஸ் பேச்சுவார்த்தை நடத்துவார் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# நீர்கொழும்பில் இடம்பெற்ற தாக்குதலில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் சீதுவ பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட 4 அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

விமான நிலைய சுற்றுவட்டத்திற்கு அருகில் உள்ள வீதியை இடைமறிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின் போது இரண்டு பொலிஸ் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தாக்குதலை மேற்கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் வேளை தொடக்கம் தனியார்துறை ஓய்வூதிய சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நீர்கொழும்பு-கொழும்பு பிரதேசத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. (ஸ்ரீ-2)

# டெங்குநோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது

## கொழும்பு தொற்றுநோய் பிரிவு எச்சரிக்கை

டெங்குநோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தொற்று நோய் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதமளவில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஆயிரத்து 885 பேர் டெங்கு தொற்றால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுள் 439 பேர் பாடசாலை மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 11 பேர் வரை மரணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலேயே அதிகளவு டெங்கு தொற்றுக்குள்ளானவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதுதவிர வருட ஆரம்பத்திலிருந்து இதுவரை நாடளாவிய ரீதியாக 5 ஆயிரத்து 264 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன் 42 பேர் மரணித்ததாக தொற்றுநோய் பிரிவின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

அரசின் அறிவுறுத்தலுக்கேற்ப அல்லது அதனால் பணிக்கப்பட்டு அல்லது கட்டுப்படுத்தப்பட்டு நாடு சாராத பாத்திரங்களின், அதாவது துணைப்படைக்குழுக்கள் அல்லது தனிப் பிரஜைகளின் நடவடிக்கைகளுக்கு அரசு பொறுப்பாகும். சர்வதேச மனிதாபிமான சட்டம் இவ் விடயத்தில் எல்.ரி.ரி.ஈ. இனை உள்ளிட்ட நாடல்லாத ஆயுதக் குழுக்கள் மீது கடப்பாடுகள் விதிக்கிறது என்பதை இனங்காணும் மனவுருவாக அமைப்பிலான பொறுப்புள்ளது.

**ஈ. இலங்கை அரசாங்கத்தின் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள்**

*192.* இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பாக ஐந்து வகையான நம்பத்தகுந்த குற்றச் சாட்டுக்களை அத்தியாயம்III இணங்காண்கிறது. சட்டப்படியான மீறல்கள் தொடர்பாக குற்றச்சாட்டின் ஒவ்வொரு வகுதிபற்றிய குழுவின் மதிப்பீட்டினை இவ்வத்தியாயம் வழங்குகிறது.

**1. பரவலான செல்தாக்குதல் மூலம் பொதுமக்களைக் கொலை செய்தல்**

**(அ) ஜெனீவா உடன்படிக்கைக்ளின் பொதுவான உறுப்புரை 3**

*193.* பொது உறுப்புரை 3இன் பந்தி (1) உட்பந்தி (அ) வின்படி, இலங்கை இராணும் மேற்கொண்ட கண்மூடித்தனமான ஷெல் வீச்சு காரணமாக பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான நம்பத்தகுந்த குற்றச் சாட்டுக்கள்:

மூன்று யுத்தசூன்ய வலயங்கள் மீதான தாக்குதல்களை இது உள்ளடக்குகிறது.

கண்மூடித்தனமான ஷெல்வீச்சு கொலைக்கு நிகராகுமா, என்பது தொடர்பாக: "பீரங்கித்தாக்குதல் போன்ற தாக்குதல் ஒன்றுக்கு பொதுமக்கள் ஆளாக்கப்பட்டு அதன் விளைவாகபொதுமக்கள் மரணித்தால், அத்தகைய தாக்குதல்களை நடாத்துபவர்கள் அத்தகைய தாக்குதல்கள் மரணத்தை விளைவிக்கக்கூடும் என்பதை அறிந்திருந்தால், அத்தகைய மரணங்களை கொலை என வகைப்படுத்தலாம்" என்பதாகச் சர்வதேச சட்ட ஆய்வுத்துறை ஏற்றுக்கொள்கிறது.

**(ஆ) போராளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியவர்களுக்கிடையிலான வேறுபாட்டுக்கான தேவை**

*194.* சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்படி "மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சகலசந்தர்ப்பங்களிலும் பொதுமக்கள் மற்றும் போராளிகள் ஆகியவர்களை வெவ்வேறாகப் பிரித்தறியவேண்டும். போராளிகளை நோக்கி மாத்திரமே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்பதோடு பொதுமக்களை நோக்கி மேற்கொள்ளப்படலாககாது." (விதி 1, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

(68) 195. பகுத்தறிவதின் அடிப்படைக் கோட்பாட்டை இலங்கை அரசாங்கம் மதிக்கவில்லை என்பதை நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் குறிப்பிடுகின்றன.

வன்னியில் மேற்கொள்ளப்பட்ட அதன் இராணுவ நடவடிக்கைகள் பூஜ்ய பொதுமக்கள் தாக்கத்தைக் கொண்டிருந்தன என அரசாங்கம் கூறியபோதிலும், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காயமடைந்தும் மரணித்தும் உள்ளார்கள் என்பதை நம்பகமான மதிப்பீடுகள் காட்டுகின்றன. யுத்த வலயத்தில் சிக்குண்டிருந்த பொதுமக்களின் எண்ணிக்கை பற்றிய மிகக் குறைவான மதிப்பீட்டையும் அது வழங்கியது. இவற்றுடன் சேர்த்துப் பார்க்கும் போது, யுத்தவயத்திலிருந்த பலரை அல்லது அநேகமானவர்களை எல்.ரி.ரி.ஈ. உடன் சம்பந்தப்படுத்தி இந்த மூலக்கோட்பாட்டைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள அது தவறியுள்ளது. என்பதை இவை குறிக்கின்றன.

**(இ) பொதுமக்கள் அல்லது பொதுமக்களின் இலக்குகளைத் தாக்குவது மீதான தடை**

**196. பொதுமக்கள் அல்லது பொதுமக்கள் இலக்குகளைத் தாக்குவதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது.**

இராணுவ இலக்குகள் மற்றும் போராளிகளுக்கெதிராக மாத்திரம் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் (வதி 7, ஐ.சி. ஆர்.சி.ஆய்வு) "மரபு ரீதியிலான சர்வதேச சட்டத்தில் பொதுமக்களை இலக்குப்பார்ப்பது நிபந்தனையற்ற மற்றும் சந்தேகமற்ற விதத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், படை நடவடிக்கைகள் காரணமாக காயமடைந்த, நோயுற்ற மற்றும் பொதுமக்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட வலயம் ஒன்றின் மீது தரப்பினர் தாக்குதலை மேற்கொள்ளக்கூடாது"(விதி 35, ஐ.சி. ஆர்.சி. ஆய்வு)

யுத்தசூன்ய வலயத்தில் பொதுமக்



களுக்கு அண்மித்து எல்.ரி.ரி.ஈ. இருந்தது தொடர்பாக,.. I.C.Y இனை உள்ளிட்ட சர்வதேச நீதிமன்றங்கள், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மீதான தடை, சனத் தொகையை பாதுகாக்கும் விதத்தில் (அதிகமான பொதுமக்களைக் கொண்டது) விளக்கமளித்துள்ளன.

*197.* இலங்கையைப் பொறுத்தவரை, தனியார் பொறுப்புச்சட்டத்தின் சூழ்நிலைப் பொருத்தத்தின் அடிப்படையில் இத்தடையின் மனோதத்துவ அடிப்படைக் கூறினை கவனத்துக்கெடுத்துக்கொள்வது அவசியமாகும்.

**ஐ.சி.ஆர்.சி.க்கு கடுமையான தடைகள் ஏற்படுத்தப்பட்டன:**

*(69) 198.* வேண்டுமென்றே அல்லது கண் மூடித்தனமாக, பொது மக்களைத் தாக்குவது போன்ற நோக்கத்தை நிர்ணயிப்பது தொடர்பாக,.. "பொது மக்களை இலக்குப்பார்ப்பதற்கான நோக்கத்தை நிரூபிக்கக்கூடிய, நேரடி அல்லது மறைமுகமான சாட்சியங்களைக்கொண்டும், குறிப்பிட்டதொரு தாக்கமடைவோர்களைத் தாக்குவதற்கான நோக்கத்



**செல்வீச்சுக்கு உள்ளாகியிருந்த முள்ளியவளை வைத்தியசாலை**

திற்கான தேவை இல்லை என்பதோடும், மேலும் பொதுமக்கள் சனத்தொகையை அல்லது குறிப்பிட்ட பொது மக்களை தாக்குதலின் நோக்காகக் கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது போன்ற விடயங்களை I.C.Y குறிப்பிட்டுள்ளது. தாக்குதலுக்காக மேற்கொள்ளப்பட்ட முறைகள் பாதிக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்துள்ள தூரம் மற்றும் வெடியின் மூலம் அத்துடன் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தோற்றம் ஆகியவற்றை உள்ளிட்ட பல்வேறுகாரணிகளைக் கொண்ட விடயம் சார்ந்த அடிப்படையில் பொது மக்களுக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை ஊகித்தறியலாம்.

*199.* இலங்கை இராணுவம் பொதுமக்களைத் தாக்குதலுக்கான தன் இலக்காகப் பாவிக்கவில்லை. என்றும் எல்.ரி.ரி.ஈ. இற்கு எதிராகவே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்ற ஏதும்வாதம் தொடர்பாக சட்டப்படியான இராணுவ இலக்கை நோக்கி அதேநேரத்தில் சட்டத்திற்குப் புறம்பாகப் பொதுமக்களையும் இலக்காகக் கொண்டிருந்தால் அத்தகையதொருதாக்குதல் சட்ட விரோதமானதாகும்.

சட்டப்படி இலக்கினைத் தாக்குவதற்காக இலங்கை இராணுவத்திடம் குறிப்பாக ஆளில்லா வேவுவிமானம் போன்ற ஆயுதங்கள் இருந்ததோடு இலங்கை இராணுவம் பொது இலக்குகளைத் தாக்கும்போது வன்னிக் கட்டடைத் தளபதி மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகள் அதுபற்றி பலமுறை அறித்திருந்தனர்.

மேலும், ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை, சில ஆஸ்பத்திரிகளில் காயடைந்த எல்.ரி.ரி.ஈ யினர் இருந்திருக்கக்கூடுமென்றிருந்தாலும் அவ்வாஸ்பத்திரிகள் சட்டபூர்வமான இராணுவ இலக்குகளாக மாறாது என்பது தொடர்பில் சட்டம் தெளிவாகவேயுள்ளது. அவை தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட சிவிலியன்களின் இடங்களாகவே இருக்கும்.

*200.* இவ்வாறாக, இலங்கை இராணுவம் வேண்டுமென்றே அல்லது கண்மூடித்தனமாக யுத்தசூன்ய வலயத்தில் பொதுமக்களையும் உணவு விநியோக வரிசைகள் உள்ளிட்ட ஆஸ்பத்திரிகள் மற்றும் ஏனைய மனிதாபிமான இலக்குகளையும் கொண்ட பொதுமக்கள் இடங்களைத் தாக்குவது தொடர்பான தடையை மீறியுள்ளதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இருப்பது குழுவுக்குத் தெளிவாகிறது. மேலும், அரசாங்கத்தின் உந்துதல் மீது பொதுமக்கள் சென்ற யுத்தசூன்ய வலயத்துக்குக் குறுக்கே குறிப்பாக, செல்வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் அத்தகையதாக்குதல்களைத் தடைசெய்யும் பொதுவான விதியை மீறியதையும் குறிப்பதோடு, அதன் பிரதான நோக்கம் பொதுமக்களிடையே பயத்தை ஏற்படுத்துவதாகும். (விதி2 ஐ.சி. ஆர்.சி. ஆய்வு)

**(ஈ) பொதுமக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான மற்றும் அளவு மீறிய தாக்குதல்கள் மீதான தடை**

*201.* பின்வருமாறு கருதப்படுபவை மீதான வகைதொகையற்ற தாக்குதல்களை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது: (70)

குறிப்பானதொரு இராணுவ இலக்குக்கு எதிராக மேற்கொள்ளப்படாத

(அ) ஒரு குறிப்பிட்ட இராணுவ இலக்கிற்கு எதிராகச் செலுத்த முடியாத யுத்தமுறையை அல்லது வழியைப் பிரயோகிக்கும் ஒன்று..

ஆ)சர்வதேச மனிதாபிமான சட்டத்

**தமிழாக்கம் தொடர் 25**

தினால் தேவைப்படுத்தப்படுவதற்கேற்ப விளைவுகளை மட்டுப்படுத்த முடியாத யுத்தமுறையை அல்லது வழியை பிரயோகிக்கும் ஒன்று.

இ) பாகுபாடின்றி இராணுவ இலக்குகளையும் பொதுமக்களையும் அல்லது பொது இடங்களையும் தாக்கும் சுபாவத்தைக் கொண்டதொன்று. (விதி11 13, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

*(தொடரும்)*

# 2ஜி வழக்கு சட்ட நடைமுறைகளில் மத்திய அரசு தலையிட முடியாது

## அமைச்சர் குலாம்நபி ஆசாத் தெரிவிப்பு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு குறித்த வழக்கின் சட்ட நடைமுறைகளில் மத்திய அரசு தலையிட முடியாது என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.


தி.மு.க. தலைவர் கருணாநிதியை டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் உள்ள தனது மகள் கனிமொழியைப் பார்ப்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி புதுடில்லிக்கு கடந்த 23 ஆம் திகதி வந்தார். அன்று மாலை கனிமொழி, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத் குமார் ஆகியோரை திஹார் சிறையில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

கனிமொழியைச் சந்தித்த பின்னர் ஹோட்டலுக்கு திரும்பிய கருணாநிதியை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

அதைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை மதியம் மத்திய சுகாதார அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பொறுப்பாளருமான குலாம் நபி ஆசாத், காங்கிரஸ் தேசிய செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜா எம்.பி ஆகியோரும் கருணாநிதியைச் சந்தித்தனர்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த குலாம் நபி ஆசாத், கனிமொழி கைதால் தி.மு.க- காங்கிரஸ் இடையேயான உறவில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்றார். அதேசமயம் கனிமொழி ஒரு பெண் என்பதால் அவர் சிறையில் உள்ளது குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கவலை



கொண்டிருப்பதை கருணாநிதியிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினையில் தி.மு.க. மீது சோனியா காந்தி அனுதாபம் கொண்டுள்ளதாக கூறிய ஆசாத் அதேசமயம் சட்ட நடைமுறைகளில் மத்திய அரசு தலையிட முடியாது என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## மரியம்பிச்சையின் மரணம் குறித்து விசாரணை

(திருச்சி)

தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மரியம்பிச்சையின் மரணம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி பொலிஸார் செவ்வாய்க்கிழமை விசாரணையை ஆரம்பித்தனர். பெரம்பலூர் மாவட்டம் பாடலூர் அருகே சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மரியம்பிச்சை கன்டெய்னர்லொறி மீது கார் மோதிய விபத்தில் திங்கட்கிழமை காலை உயிரிழந்தார்.

இந்த உயிரிழப்பில் மர்மம் இருப்பதாக எழுந்த புகார்களின் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரின் விசாரணைக்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா திங்கட்கிழமை உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி பொலிஸார் விசாரணையை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தனர்.

இந்த விசாரணைகள் தொடர்ந்தாலும் லொறி சாரதியைப் பிடித்தால் தான் மேலும் விபரங்கள் தெரிய வரும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ)

## அரசியலில் குதிப்பாரா பிரியங்கா?

(புதுடில்லி)

காங்கரஸ் தலைவர் சோனியாவின் மகள் அரசியலில் தீவிரமாக இறங்குவது குறித்து அவர்தான் முடிவு செய்ய வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் தகவல் தொடர்பாளர் மணிஷ் திவாரி தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராவுடன் பணியாற்றியவர் முன்னாள் அமைச்சர் வசந்த் சாத்தே. இவர் சமீபத்தில் குறிப்பிடுகையில்,

இந்திராவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு உள்ளது. குறிப்பாக ராகுலை விட பிரியங்காவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகம் உள்ளது.

ஆனால், பிரியங்கா அரசியலில் ஈடுபட முன்வரவில்லை. அவரது சகோதரன் ராகுல் தான் அரசியலில் தீவரமாக இறங்கியுள்ளார் என்றார்.

இது குறித்து காங்கிரஸ் கட்சியின் தகவல் தொடர்பாளர் மணிஷ் திவாரி குறிப்பிடுகையில்,

பிரியங்கா அரசியலுக்கு வருவது அவரது தனிப்பட்ட விருப்பம் .ராகுலின் செல்வாக்கால் பிரியங்காவின் அரசியல் பிரவேசம் தடைப்படுவதாக கூறுவது தவறு என்றார் . (ஸ்ரீ)



தமிழக சட்டசபையின் அவை முனைவராக நியமிக்கப்பட்ட நிதி அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் சென்னையில் முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெறுவதை படத்தில் காணலாம்.

## ரஜினியை பார்ப்பதற்கு வந்த வடிவேலுவுக்கு அனுமதி மறுப்பு

தி.மு.க.வின் பிரசார பீரங்கியாக வலம் வந்த நடிகர் வடிவேலு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை கடுமையாக விமர்சித்தார்.

இதன் விளைவாக ரஜினியின் ராணா படத்தில் இருந்து நீக்கப்பட்டார். இது பற்றி கருத்துத் தெரிவித்த வடிவேலு,


ராணாவாவது... காணாவாவது... தேர்தல் முடிவு வந்த பின்னர் பாருங்கள் எத்தனை பேர் யார் காலில் வந்து விழப்போகிறார்கள் என்று... என்று தெனாவட்டாகக் கூறினார்.

ஆனால், தேர்தல் முடிவில் தி.மு.க. தோல்வியைத் தழுவியது. வடிவேலுவின் வீடு மீது கல் வீசப்பட்டது. மர்ம நபர்கள் வடிவேலுவின் பண்ணை தோட்டத்தை நாசப்படுத்தினர். இதனால் சென்னையை விட்டு மதுரையிலேயே இருந்தார் வடிவேலு.

நிலைமைசற்று அமைதியானதால்சென்னை வந்த வடிவேலு. ராமச்சந்திரன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரஜினியின் உடல்நிலையை விசாரிக்கச் சென்றுள்ளார்.


இவர் போயிருந்த நேரத்தில் ரசிகர்கள் பெருமளவு இல்லை. எப்படியோ உள்ளே சென்றவர் அண்ணனைப் பார்க்கணும் என்றதாகவும் பெரிய பெரிய ஆளுங்களையே உள்ளே விடல உங்களை எப்படி விட முடியும்? போயிட்டு வாங்க என்றார்களாம் மருத்துவமனை நிர்வாகத்தினர்.

(ஸ்ரீ-2)



டில்லி வந்திருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியை மத்திய அமைச்சர் மு.க.அழகிரி சந்தித்துப் பேச வருகை தருவதை படத்தில் காணலாம்.

# பாரதச் செய்திகள்



## ராஜீவ் கொலையில் தி.மு.க. மறைமுகமாக செயற்பட்டுள்ளது

### தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலையில் தி.மு.க. மறைமுகமாக செயற்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து முதல்வர் கூறியதாவது,

கனிமொழி ஒரு பெண் என்பதால் அவருக்கு பிணை வழங்க வேண்டும் என நீதிமன்றில் கேட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இந்த வாதமே தவறு. அரசியலில் இருந்து கொண்டு இப்படி ஒரு சலுகையை எதிர்பார்க்கக்கூடாது. அதிலும் குற்ற வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருப்பவர் இப்படி ஒரு சலுகையை எதிர்பார்க்கக்கூடாது.

திராவிட கொள்கைகள் தான் ராஜீவ் கொலைக்குக் காரணமாக அமைந்தது என புலிகளின் பிரதிநிதி குமரன் பத்மநாபன் கூறியிருக்கிறாரே? ராஜீவ் கொலையின் பின்னணியில் மறைமுகமாக தி.மு.க. செயற்பட்டிருக்கிறது என்பது தான் எங்களது குற்றச்சாட்டு.

தமிழகத்தின் பொருளாதார நிலை எப்படியிருக்கிறது? இது குறித்து சட்டசபையில் வெள்ளை அறிக்கை வெளியிடப்படுமா?

பொருளாதார நிலை குறித்து ஆய்வு நடந்து வருகிறது. இப்போதுதான் ஒவ்வொரு துறையாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி வருகிறோம். இவை முடிந்த பின்தான் பொருளாதார நிலை குறித்து விபரங்கள் தெரிய வரும். தேவைப்பட்டால் வெள்ளை அறிக்கை வெளியிடுவோம். இவ்வாறு கூறினார்.

(ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது

## உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கையை ஒருபொழுதும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது எனவும் சம்பள உயர்வு எதுவும் வழங்க முடியாது எனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் , பீடாதிபதிகள், பேராசிரியர்கள் , விரிவுரையாளர்கள் மத்தியில் பேசும் பொழுது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்தி வந்தனர். அதன் அடுத்த கட்டமாக பல்கலைக்கழக துறைத்தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்து சம்பள உயர்வு கோரிக்கைகளை முன் வைத்தார்கள் எனினும் பதவிகளை இராஜினாமா செய்த தலைவர்கள் பதவிகளை துறந்தவர்கள் என்றே கருதப்படுவார்கள் என்றும் பதவிகளை இழக்க நேரிடும் என்றும் உயர்கல்வி அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் போராட்டத்தை ஒழுங்கமைத்து நடத்தி வந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்க மறுத்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பல்கலைக்கழக துணைவேந்தர்கள் ,பீடாதிபதிகள், பேராசிரியர்கள்,விரிவுரையாளர்களை அழைத்து பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியிருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.போராட்டத்தின் அடுத்த கட்டம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்தப் பேச்சுவார்த்தையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் க.பொ.த உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்று கூடல் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் உயர்தர மாணவ மன்றத் தலைவி செல்வி. ப. சரண்யா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட புள்ளி விபரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். மேலும் அன்றைய தினம் உயர்தர மாணவர்களின் படைப்புக்கள் நிறைந்த *இந்து விழிகள்* சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளியிடப்படவுள்ளது. இந்நூலின் வெளியீட்டுரையை வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் நிகழ்த்துவார். ஆய்வுரையினை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் வைத்திய கலாநிதி க.க. யோகநாதன் ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-19)

# போலிக்கடவுச்சீட்டுடன் இலங்கைக்கு வரமுயன்ற பெண் சென்னையில் கைது

(கொழுப்பு)

இந்தியாவிலிருந்து போலிக் கடவுச் சீட்டினை பயன்படுத்தி இலங்கை வரமுற்பட்ட இலங்கைப் பெண்ணொருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வசந்தி என்ற 42 வயதுடைய பெண்ணே இந்தியக்கடவுச்சீட்டை பயன்படுத்தி நேற்று முன்தினம் காலை இலங்கை வரமுற்படும் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இதற்கு முன்னர் இரு தடவை இந்தியக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

இந்திய பிரஜையான சிறிரமாலு என்பவரை திருமணம் செய்து கொண்ட வசந்தி கடந்த 20 வருடங்களாக கிரிஸ்ணகிரி பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார்.

கடந்த 1994 ஆம் ஆண்டு முகவர் ஒருவர் மூலம் இந்தியக் கடவுச்சீட்டினை பெற்றுக் கொண்ட வசந்தி 2004 ஆம் ஆண்டு அதனை புதுப்பித்துள்ளார்.

இந்தியாவில் தான் பதிவுத் திருமணம் செய்து கொண்டுள்ளதாக வசந்தி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு அதிகாரிகள் குறித்த பெண்ணை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# புதிதாக 2 ஆயிரத்து 524 ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

தேசிய கல்வித்துறையில் 2 ஆயிரத்து 524 பேர் புதிதாக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசியக் கல்வியியல் கல்லூரிகளில் மூன்று வருடகால டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கே இவ்வாறு நியமனங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இவர்களுக்கு ஆசிரிய சேவை நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆசிரியர் நியமனக் கடிதத்தை கையளிக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பிரதி அமைச்சர் விஜித முனி சொய்ஸா, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# மாத்தளையில் வெடிப்பு சம்பவம்; ஐவர் படுகாயம்

(கொழுப்பு)

மாத்தளை பிரதேசத்தில் கரகாதென்ன பகுதியில் அமைந்துள்ள வானொலி கோபுரத்திற்கு அருகில் வாகனம் ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.நேற்றுக் காலை இடம் பெற்றுள்ள இந்த சம்பவத்தில் 5 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் மாத்தளை வைத்தியசாலையிலும் ஒருவர் கண்டி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.சம்பவத்தில் ஏற்பட்ட வெடிப்பு எதன் காரணமாக ஏற்பட்டது என்பதை உறுதிசெய்ய முடிய வில்லை. (ஸ்ரீ-2)

# தனியார்துறை ஊழியர்களின் உரிமைகள் பறிக்கப்படமாட்டாது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

தனியார் துறை ஊழியர்கள் அனுபவித்து வரும் உரிமைகள் எவையும் தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பறிக்கப்பட மாட்டாது என பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதன் படி தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை போன்றவைகளை இழக்க நேரிடாது என அமைச்சர் குறிப்பிட்டார்.

சேவையிலிருந்து இளைப்பாறுபவர்களுக்கு தங்கள் வாழ்க்கை இறுதிக் காலத்தை மகிழ்ச்சியோடு கழிப்பதற்காக இந்த ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறதே தவிர தனியார் துறை ஊழியர்களின் உரிமைகளை சூறையாடுவதற்கான முயற்சி அல்ல என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த தனியார் துறை ஓய்வூதிய திட்டத்திற்கென ஆரம்பமுதலீடாக ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசு செலுத்தவுள்ளது. இதன் மூலம் நன்மையடைபவர்களின் பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் அவர்களின் மறைவுக்கு பின்னர் கொடுப்பதற்கும் இந்தச் சட்டம் திருத்தப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)







சக்தி மைக்றோ சிஸ்ரம் நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்களுக்கு வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ஆர்.கைலாசபிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் நிறுவன இயக்குநர் கு.தீலிபன் உரைநிகழ்த்துவதையும் உதவிப்பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரெட்ணம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



ஆன்மீகம் 06

"என்கல்லூரிப் பேராசிரியர் ஒருவரை என் மூத்த சகோதரி போல் நினைத்தேன். வாழ்க்கையில் நான் எடுத்த பல முக்கியமான முடிவுகளுக்கு அவர்தான் வழிகாட்டியாக இருந்தார். அப்படிப்பட்டவரை அண்மையில் முன்னறிவிப்பின்றிசந்திக்கச் சென்றேன். வாசல் கதவைத் தட்டியதும், அவர் வந்து திறந்தபோதே போதையில் தள்ளாடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். உள்ளே ஆண்களின் குரலகள் கேட்டன. "எதுவாயிருந்தாலும் நாளைக்கு வா!" என்று வாசலோடு என்னை அனுப்பி கதவைச் சாத்தி விட்டார். அந்த கணத்திலேயே அவர்மீது எனக்கு இருந்த மரியாதையெல்லாம் ஒட்டுமொத்தமாக நொறுங்கிவிட்டது. அதற்கப்புறம் அவரைத் தவிர்க்கத் தொடங்கி விட்டேன். ஆனால் மனம் எதையோ இழந்து விட்டது போல் தவிக்கிறதே....?"

உங்களிடம் மட்டுமல்ல நம்நாட்டில் இருக்கும் பலரிடம் நான் காணும் பிரச்சினை இது.

கிரிக்கெட்டில் ஒருவரை உங்கள் அபிமான வீரராக நினைக்கிறீர்கள். அவரிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்? தேவையான ரன்கள் எடுக்கிறாரா? அவசியமான விக்கெட்களைக் கைப்பற்றுகிறாரா? கச்களைக் கோட்டை விடாமல் பிடிக்கிறாரா? அவ்வளவு தானே?

ஆனால் அவருடைய குடும்பம் பற்றி அவருடைய முதல் காதலிபற்றி அவர் சேர்த்த சொத்து பற்றி அவருக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை என்பது பற்றியெல்லாம் உங்களுக்கு ஏன் கவலை?

கிரிக்கெட் மைதானத்தில் மட்டுமே அவர் உங்களின் நியாயமான எதிர்பார்புகளுக்கு பொறுப்பானவர். மைதானத்திற்கு வெளியே நடப்பது அவருடைய பிரத்தியேகமான அந்தரங்கமான வாழ்க்கை. அதில் தலையிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

சினிமா நட்சத்திரங்கள் ,விளையாட்டு வீரர்கள், அமைச்சர்கள், ஆசிரியர்கள் என்று அத்தனை பேருக்கும் அவரவர் வாழ்க்கையை வாழ்வதற்கு உரிமைஉண்டு.

பேராசிரியர் உங்கள் பிரச்சினைகளுக்குச் சரியாக தீர்வு தருகிறார் எனும் போது, அவர் அவருடைய வீட்டுக்குள் குடித்தால் என்ன, ஆண்களோடு நட்பாக இருந்தால் என்ன, கயிற்றில் தொங்கினால் என்ன, காற்றில் நடந்தால்தான் உங்களுக்கு என்ன?

அவர் ஏற்றுக்கொண்ட பொறுப்பபை சரிவர நிறைவேற்றுகிறாரா என்பதை மட்டும் கவனியுங்கள்.

**"அது எப்படி சற்குரு ஒழுக்கம் இல்லாத ஒருவர் எனக்கு அறிவுரை தர முடியும்? அதற்கு அவருக்கு என்ன தகுதியிருக் கிறது?"**

அவர் என்ன உங்களையும் தன்னுடன் அமர்ந்து மது அருந்தச்சொல்லி வற்புறுத்தினாரா? அல்லது குடித்துவிட்டு உங்களிடம் தவறாகநடந்து கொள்ள முயற்சி செய்தாரா? அப்படி ஏதாவது நடந்திருந்தால் அது வேறு விடயம்.

தான் போதையில் இருக்கையில் உங்களுக்கு எந்தத் தர்ம சங்கடமும் தரக்கூடாது என்று மறுநாள் வரச்சொல்லி அனுப்பினாரே உங்களைப் பொறுத்தவரையில் அவரிடம் அதைவிட பெரிய ஒழுக்கம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

அடுத்தவர் விடயத்தில் அவசியத்திற்கு அதிகமாக மூக்கை நீட்டுவது மட்டும் எந்த ஒழுக்கத்தில் சேர்த்தி?

**"அப்படியானால் ,அவர் செய்வது சரியா?"**

அதுவேறு பிரச்சினை அவருடைய வாழ்க்கையைப்பற்றி சரியா தவறா என்று தீர்ப்புச் சொல்ல நான் தயாராக இல்லை. உங்களுக்கும் அது அவசியம் இல்லை என்கிறேன்.

உங்களின் எதிர்பர்ப்புக்களுக்கு ஏற்ப அடுத்தவர் நடக்கவில்லை என்பதற்காக அவரைக் குறையுள்ளவர் என்று முடிவுகட்ட உங்களுக்கு உரிமையில்லை.

சங்கரன்பிள்ளையின் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் மாம்பழங்கள் கனிந்து தொங்கின. யாரும் இல்லாத சமயத்தில் சங்கரன் பிள்ளை இரகசியமாக அங்கே போகின்றார். முதல்பழத்தை அவர் பறித்ததும் "கடவுள் உன்னைக் கவனிக்கிறார்." என்று ஒரு குரல் வந்தது.

திடுக்கிட்டார். அக்கம்பக்கம் பார்த்தார். யாரும் இல்லை. பிரம்மை என்று நினைத்து அடுத்தடுத்துப் பழங்களைப்பறித்தார்.

"நான்கு பழங்களுக்கு மேல் கடவுள் சும்மா இருக்க மாட்டார்." என்று மறுபடியும் அதே குரல் கேட்டது.

சங்கரன்பிள்ளை சட்டெனத் திரும்பினார். குரல்வந்த திசையில் ஒரு கிளி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தார்; புன்னகைத்தார்;

"கடவுள் கவனிப்பதாக மிரட்டியது நீ தானா?"

"ஆமாம்" என்றது கிளி.

"செல்லக்கிளியே உன்பெயர் என்ன?"

"தேவதை!"

"கிளிக்குத் தேவதையென்று பெயரா? வினோதமாக இக்கிறதே?" என்றார் சங்கரன்பிள்ளை.

"டாபர்மேன் நாய்க்கு கடவுள் என்று பெயர் வைத்திருப்பதைவிடவா?" என்று திரும்பிக்கேட்டது கிளி. சங்கரன்பிள்ளைக்கு அங்கே என்ன ஆனது என்பது முக்கியமல்ல. தேவதை என்ற பெயரின் மீதோ கடவுள் என்ற பெயரின்மீதோ சங்கரன்பிள்ளை சில எதிர்பார்ப்புக்களை சுமத்தியிருந்தால் அது யார் குற்றம்? அந்தச் சகோதரி திடீரென்று மாறி விடவில்லை. அவரைப்பற்றி நீங்கள் வைத்திருந்த விம்பம்தான் மாறிவிட்டது. கண்ணாடியெதிரே ஒருவர் நிற்கிறார்; திடீரென்று கண்ணாடி நொருங்கிவிட்டது. அதில் தெரிந்த அவருடைய விம்பம் நொருங்குமே தவிர அவரே நொருங்கிவிட்டார் என்று எப்படித் தீர்மானிப்பது?

## மணம்மிக்க மலர்களைப் பாருங்கள்

நீங்கள் ஒரு மலர்ச்செடியை பார்க்கிறீர்கள் அதில் மலர்ந்து மணக்கும் பூக்களை அன்றாடம் பறித்து ரசிக்கிறீர்கள். ஒரு நாள் தற்செயலாக குனிந்து பார்க்கிறீர்கள்; செடியின் வேர்கள் அழுக்கிலும் அசிங்கத்திலும் ஊன்றியிருப்பதை கவனிக்கிறீர்கள்; உடனே பூக்களே அருவருப்பாகிவிடுமா? செடிக்குத் தண்டனை தருவதாக நினைத்து மணம் மிக்க மலர்களை வேண்டாம் என்று ஒதுக்குவதால் யாருக்கு நட்டம்? அமுதம் தேடிப்போகையில் விஷத்தில் ஏன் கவனம்போகிறது?

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# கணினியில் தூரிகையாகும் கைவிரல்கள்



03

கவனங்கள் எல்லாம் காசின் மேலும் பின், வீடு என ஆரம்பித்தும் வீடுகளிலும், கார் என ஆரம்பித்து கார்களிலும், கதிரை மேசை, காலுக்கு கீழ்ப்போடும் கம்பள விரிப்புக்கள் என கௌரவச் சண்டைகளுக்குள் நசுங்கி எங்களுக்குள் நாம் தனிமைப் பட்டுப்போனது என்ற விடயம் புலம் பெயர் தழிழர்களின் பொதுப்பண்பாடாக அமைந்தது எனப்பதிவு செய்யலாம்.

பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுத்துண்டு கேட்கவேணும் என்று நினைத்தமே தவிர கொஞ்சம் கொஞ்சமாய் பாம்பின் விடம் எம் உடலில் படர்வதை அவதானிக்கத் தவறிவிட்டோம். ஆனால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அதனைக் கவனிக்க தொடங்கியதை நல்ல காலம் என்றே சொல்லவேண்டும். அந்த அபாயச்சங்கின் ஒலியைக் கண்டு பலர் பயந்தார்கள். விளைவு தமிழ்க்கல்வி ஆரம்பமானது.

பல நாட்டு அரசாங்கங்கள் தாய் மொழிக் கல்விக்கு கொடுத்த சில மானியங்கள், பல்கலைகழக தேர்வுக்கு தாய் மொழிக் கல்வியின் பெறுபேறுகளும் கருத்தில் கொள்ளப்படும் என்ற புதிய சட்டதிட்டங்கள் தாய்-தகப்பன்மாரையும் பிள்ளைகளையும் தமிழ்ப்பக்கம் திரும்பிப்பார்க்க வைத்தது. முற்றுமுழுதான ஒரு புதிய பாஷை, புதிய எழுத்துக்களை கற்கும்பொழுது சொந்தப்பாஷையை கற்க ஏன் முடியாது என்ற எண்ணம் தலைதூக்கியது. 247 எழுத்துக்கள் தவிர வடமொழி எழுத்துக்கள்... பிரதேச வழக்குகள் எல்லாம் எங்கள் பிள்ளைகளை பயப்படுத்திவிடும் என பெற்றோர்கள் பயந்தாலும் பிள்ளைகள் பயப்படவில்லை. என்பதைப் பெறுபேறுகள் காட்டத் தொடங்கியது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி இரண்டு விதமாக நடைபெறுகின்றது. ஒன்று முழுமையாகக் கற்றுத் தெளிந்தவர்களால் நடத்தப்படுவது, தமிழ் தெரிந்தால் போதும் ஞாயிற்றுக்கிழமைகளில் நீங்கள் தமிழ் ஆசிரியர்களாய் கல்வி கற்பிக்கலாம். பின் நாட்கள் ஓடஓட நீங்கள் துணைஅதிபராய், பின் அதிபராய் பதிவிஉயரலாம். என்ற வகையில் அமைவது.

எதுஎப்படிஅமையினும்எழுவாய்-பயனிலை -செயற்படு பொருளுடனும், மனப்பாடத்துடனும் நகரத்தொடங்கிய தமிழ் ஆர்வமும் இளைய தலைமுறைக்கு கணினியில் இருந்த அதிதிறமையும் அவர்களை கணினியில் தமிழ் எழுத வைத்தது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இதுதான் ஆரம்பம்.

அடுத்தகட்டமாக சித்திரங்களுக்குக்கீழே சின்னச்சின்ன வசனங்கள் எழுதியவர்கள் பின், சித்திரங்களுக்கு மேலே சிங்காரமாய் கவிதை எழுத தொடங்கினார்கள். அவர்களின் கவிதைகளின் பின்னணி இசை, கணினியில் அமைக்கப்பட்ட கிராபிக் வேலைப்பாடுகளாய் இருந்தன.

ஒருநாள் என்மகள் தன் கணினித்திரையை காட்டினாள். அழகிய பென் குயின்கள் பனி நிறைந்த ஒரு கடற்கரையில் நின்றிருந்தன.

இதில் என்ன இருக்கிறது எனக் கேட்டேன் அடுத்த கட்டையைத்தட்டி விட்டாள் எழுத்துக்கள் எழுந்துவந்தனஅதிர்ந்துபோய் விட்டேன்.

**அகதிகள்**

இந்தப் பனி　　　எங்கே
இந்தக் கடல்　　　எமது சொந்தம்
இந்த வானம்　　　அங்கே
இங்கே எப்படி நாம்!　　　நாம்போவோமா?

அகதி என்றால் முகத்தைத் தொலைத்தவர்கள், முகவரியைத் தொலைத்தவர்கள் என வார்த்தைகளைத் தேடி அகதிகளான எங்களையே நாங்கள் இன்னமும் முடமாக்கி கவிதை எழுதிக்கொண்டிருந்தபொழுது... தமிழ்க் கல்வி இரண்டாம் வருடம் மட்டும் தான்!! ...அகதிக்கு மேலுள்ள அர்த்தத்தைக் கொடுத்திருந்தாள்...

ஜீவகுமாரன் என்ற பெயருக்கு முன்னால் இருந்த "எழுத்தாளர்" என்ற அடைமொழி எனக்கு அதிகமாகவேபட்டது.

அடுத்தநாள் நான் வேலையால் வர தங்கைக்காரி வந்தாள். அவளுக்கு எப்பொழுதும் அக்காவுடன் போட்டி.

மெல்லத்தமிழ் துளிர்க்கிறது! என்மனம் உவகை கொண்டது.

அடுத்த ஒரு கிழமைதான் ஒரு இணையத்தளத்தில் இந்தப்பட்டாளத்தின் தோழர்தோழிகளின் கவிதைகள் வரத்தொடங்கின- சின்னச் சின்ன தமிழ்ப்பிழைகளுடன்.

பின்பு பிரசுரத்துக்குமுன்பு பிழைதிருத் தும் பதவி எனக்குத்தரப்பட்டது. அன்றிலிருந்து ஆபீசில் என் தேனீர் இடை வேளையும் உணவு இடைவேளையும் குறையத்தொடங்கியது.

அவர்களின் அடுத்த கட்டம் மிக ஆனந்தமானது.


ஒருவரின் கவிதைகளுக்கு மற்றவர்கள் விமர்சனம் எழுதத் தொடங்கினார்கள்.


ஆரோக்கியமான விமர்சனங்கள் – விமர்சனங்களின் எண்ணிக்கையில் அவர் களுள் அவர்கள் யார் நல்ல கவிஞர் என எடை போட்டுக்கொண்டார்கள்

விமர்சனங்கள் மட்டுமில்லை... எதிர் வினைகள்...எனது மகள் துணிந்தே எழுதினாள் "இதெல்லாம் கவிதையா?"என்று. அடுத்த ஐந்தாவது வினாடி அடுத்தது வந்து விழுந்தது "உன் அப்பா எழுதுவதெல்லாம் கதையா?" என்று. ஆபிசில் அன்று பலத் துச் சிரித்துவிட்டேன். பக்கத்திலிருந்த டெனிஸ் ஊழியர்கள் என்னைத்திரும்பிப் பார்த்தார்கள்; இந்த வளர்ச்சியின் அடுத்த கட்டம் தான் அந்த இணையத்தளத்தில் வந்த அத்தனை கவிதைகளையும் அதே வர்ணங்களுடன் கவிதைநூலாக வெளியிடுவது என்பது. அதுவேதான் "மெல்லத் தமிழ் இனித்துளிர்க்கும்!" என்ற நூல்.

**வீ. ஜீவகுமாரன் டென்மார்க்**

நான் இதுவரை ஐந்து நூல்களை வெளியிட்டிருக்கலாம் தொடர்ந்தும் வெளி யிட்டுக் கொண்டிருக்கலாம். சின்னச்சின்ன பரிசுகளாலும் பாராட்டுக்களாலும் என் எழுத்துக்கள் அங்கீகாரம் பெறலாம் அல்லது நிராகரிக்கப்படலாம்.ஆனால் "மெல்லத் தமிழ் இனித்துளிர்க்கும்" நூலைத் தொகுத்து வெளியிட்டபொழுது எனக்குக் கிடைத்த திருப்தி என்றுமே எனக்கு திரும்பக் கிடைக்கப்போவதில்லை. *(முற்றும்)*





யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சின்மயா மிஷன் சுவாமி ஜாக்கிரத் சைதன்ய மாணவர்களுக்கு சொற்பொழிவாற்றுவதையும் அதிபர் செ. இராமநாதன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## சிங்கப்பூரில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 48 இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

சிங்கப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 48 இலங்கையர் கடந்த 23 ஆம் திகதி சிங்கப்பூர் குடிவரவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் செயற்படும் அனைத்து தங்கு விடுதிகளையும் கடந்த 23 ஆம் திகதி குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் சோதனையிட்ட போதே சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 48 இலங்கையரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 15 தொடக்கம்70 வரையான வயதுப் பருவங்களைக் கொண்டவர்கள் என்றும் தற்போது அவர்கள் அனைவரும் சிங்கப்பூர் பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

அத்துடன் கடந்த வாரமும் சிங்கப்பூரில் 52 வரையான சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அந்நாட்டுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## 250 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்து பதுக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் 250 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பதிக்கிவைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் உடனடியாக விசாரணையை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கட்டளையிட்டுள்ளார்.

புற்றுநோய் மருந்துகளின் விநியோகம் பாவனை என்பவை தொடர்பில், முகாமைத்துவ கண்காணிப்பு ஏற்பாடுகள் ஒழுங்காக இல்லாமையாலேயே மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதாக அமைச்சர் கூறினார்.

புற்று நோயாளிகளுக்கு கொடுப்பதற்கென 800 வகையான ஊசி மருந்துகள் உள்ளன. இதில் ஒன்று 24 ஆயிரம் ரூபாவரை பெறுமதியானது. வைத்தியசாலைகளில் தற்போது மருந்து தட்டுப்பாடு இல்லை. அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தேவையான 95 வகை அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசியமானதும் அதிக விலையுடையதுமான மருந்துகளை தொடர்ந்து கிடைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட அமைச்சர் அத்தியாவசியமானதும் அதிக விலையுடையதுமான மருந்துகளை பதிக்கிவைத்தமையானது அரசாங்கத்துக்கு கெட்ட பெயர் உண்டாக்குவதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்ட நாசகார செயல் என தான் சந்தேகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## சிறுவர்களை வெளிநாட்டு சுற்றுலாவில் பங்கெடுக்க செய்தமை தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

எந்தவொரு ஒழுங்குகளும் இன்றி சிறுவர்கள் சிலரை வெளிநாட்டு சுற்றுலா ஒன்றில் பங்கெடுக்க செய்த சம்பவம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வெளிநாட்டு சுற்றுலாவிற்காக சுனாமி ஆழிப்பேரலை கிராமத்தைச் சேர்ந்த 12 சிறார்களை தெரிவு செய்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் 6 பேரை எந்தவொரு முறையான ஒழுங்குகளும் இன்றி வெளிநாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொள்ளச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சிறார்கள் 13 வயதுக்கு குறைவானவர்கள் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 2011.05 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1293-ஜப்பான் கமகூரா என்ற இடத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1538-ஜோன் கால்வின் மற்றும் அவரது சீடர்கள் ஜெனீவா நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கால்வின் அடுத்த மூன்றாண்டுகள் பிரான்சின் ஸ்ட்ராஸ் பூர்க் நகரில் வாழ்ந்தார்.

★ 1637-பீக்குவாட் போர்: புரொட்டஸ்தாந்து, மொஹீகன் படைகள் ஜேர்மன் தளபதி ஜோன் மேசன் தலைமையில் ஐக்கிய அமெரிக்காவின் கனெடிகட்டில் பீக்குவாட் இனத்தவர்களின் ஊர் ஒன்றைத் தாக்கி ஐநூறுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் பழங்குடியினரைக் கொன்றனர்.

★ 1838-கண்ணீர்த் தடங்கள்: ஐக்கிய அமெரிக்காவில் செரோக்கீ பழங்குடிகளின் கட்டாயக் குடியகல்வின் போது 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1879- ஆப்கானிஸ்தான் அரசை உருவாக்க கண்டமாக் உடன்பாட்டில் ரஷ்யாவும் ஐக்கிய இராச்சியமும் கைச்சாத்திட்டன.

★ 1896-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.

★ 1912-இலங்கையில் இருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

★ 1917-இலினொய்யில் நிகழ்ந்த சூறாவளியின் தாக்கத்தினால் 101 பேர் கொல்லப்பட்டு 689 பேர் காயமடைந்தனர்.

★ 1918-ஜோர்ஜியா மக்களாட்சிக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1966- பிரித்தானிய கயானா விடுதலை அடைந்து கயானா எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1969-அப்பல்லோ 10 விண்கலம் மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்கு தேவையான சோதனைகளை வெற்றிகரமாக முடித்து விட்டு பூமி திரும்பியது.

★ 1983-ஜப்பானைத் தாக்கிய 7.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஆழிப் பேரலையை உண்டு பண்ணியதால் 104 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1987- யாழ்ப்பாணம் வடமராட்சியில் இலங்கை படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இடம் பெற்றது.

★ 1991- தாய்லாந்தின் விமானம் ஒன்று வெடித்ததில் 223 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2002-மார்ஸ் ஒடிசி விண்ணூர்தி செவ்வாய்க் கோளில் நீர் பனிப் படிவுகள் இருப்பதை அறிந்தது.

★ 2006-ஜாவாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 5,700 பேர் கொல்லப்பட்டு 200,000 பேர் வீடுகளை இழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1799-அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்யக் கவிஞர் (இ.1837)

★ 1884-மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர்

### சிறப்பு நாள்

★ ஜோர்ஜியாவின் தேசிய தினம்

# கவிதை முதல்..... திகார் வரை.....!

# கனிமொழியைப் பழிவாங்கிய அரசியல்!



கவிஞராக, மனிதவுரிமையாளராக எளிமையாக அறியப்பட்ட ஒரு பெண்ணை அதிகாரத்தின் ருசி எந்த எல்லைக்கும் கொண்டுபோகும் என்பதற்கு கனிமொழி ஒரு உதாரணம்.

பெரிதாக இலட்சியங்களோ, அரசியல் ஆர்வமோ இல்லாத ஒரு சாதாரணப் பெண்ணாகத்தான் கனிமொழியின் ஆரம்பகால வாழ்க்கையிருந்தது. 1990களின் ஆரம்பத்தில் கனிமொழியின் முதல் திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட பிரிவிற்குப்பின்னர் அவரது முதல்கவிதைத் தொகுப்பு "கருவறை வாசனை" வெளிவருகிறது. "கவிஞர் கனிமொழி" கருணாநிதி என்று அறியப்பட்ட அவர் இலக்கிய உலகில் கொண்டாடப்பட்டதற்கு பின்பாதிப் பெயரும் ஒரு முக்கிய காரணம்.

சர்ச் பார்க்கில் பள்ளிப்படிப்பும் எத்திராஜ் கல்லூரியில் முதுநிலைப் பொருளாதாரமும் படித்திருந்த கனிமொழி 1992ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்து வருடங்கள் "தி ஹிந்து" பத்திரிகையின் உதவியாசிரியராக பணி புரிந்தார். 1997ஆம் ஆண்டு அரவிந்தனோடு கனிமொழிக்கு திருமணம் நடக்கிறது. அதன்பிறகு சிங்கப்பூர் "தமிழ் ஒசை" இதழில் பணி, "குங்குமம்" பத்திரிகையில் வேலை, "தி வீக்" பத்திரிகையின் கட்டுரையாளர் என இப்படி ஒரு சாதாரண பெண்ணுக்குரிய வாழ்க்கைதான் கனிமொழியுடையதும்.

ஒரு மாநில முதல்வரின் மகள் என்கிற எந்தபந்தாவையும் கனிமொழியிடம் பார்க்கமுடியாது என்பதுதான் அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டு சொல்வது. ஒருமுறை ஒரு இலக்கிய நிகழ்ச்சிக்குப் போய்விட்டு திரும்புவதற்கு கார்வரவில்லை என என்னோடு ஆட்டோ ஏறி வீட்டுக்குப்போனார் கனிமொழி என்று சொல்கிறார் ஒரு கவிஞர்.

குஜராத் படுகொலை தொடர்பாக 2002 இல் சென்னையில் கூட்டம் ஒன்றை நடத்தினோம். அதற்கு கனிமொழி சில உதவிகளும் செய்தார் அந்தக்கூட்டத்தில் கனிமொழியின் பேச்சு உணர்ச்சிபூர்வமாக அமைந்திருந்தது. ஒரு தாய் என்கிற நிலையில் இருந்து அவர் பேசிய பேச்சு பார்வையாளர்களை கண்கலங்க வைத்தது. அந்த காலகட்டங்களில் மனிதவுரிமை சார்ந்த பணிகளோடுதான் கனிமொழி தன்னை அடையாளப் படுத்தினார்.

பிறகு அரசியலுக்கு வந்த அவர் மதுரை தினகரன் ஊழியர்கள் எரித்துக்கொல்லப்பட்ட சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது "அழகிரி ஒரு அன்பான மனிதர்" என்று குறிப்பிட்டார் கனிமொழி. அரசியல் அவரை எவ்வளவு தூரம் மாற்றிவிட்டது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்கிறார் காலச்சுவடு பதிப்பக உரிமையாளர் கண்ணன்.

2004 இல் காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி தமிழகத்தில் பெரிய வெற்றி பெற்றது. மத்தியில் ஆட்சியில் பங்கு வகித்த தி.மு.க சொல்வதையெல்லாம் கேட்கும் நிலையில் தான் அன்றைய காங்கிரஸ் இருந்தது. மத்தியில் வளமான துறைகளை தி.மு.க கையில் வைத்திருந்ததால் கருணாநிதியின் கோபலபுரம் குடும்பத்தில் பணம் குவியத்தொடங்குகிறது இது சி.ஐ.டி காலனியை எரிச்சல் படுத்துகிறது.

தனக்கும் சரிபாதி உரிமைகேட்டு ராஜாத்தி அம்பாள் கருணாநிதியிடம் போராட ஆரம்பிக்கிறார். இந்தப்பின்னணியில் தான் அதுவரை அதிகம் அறியப்படாத கனிமொழி தி.மு.க வில் முன்னிறுத்தப்படுகிறார். கனிமொழியின் எல்லாப்பரிமாணங்களிலும் ராஜாத்தி அம்மாளின் பங்கு அதிகம். தனக்கென்று எந்த போராட்டப்பின்னணியோ, கட்சித் தொண்டர்கள் செல்வாக்கோ இல்லாத கனிமொழி தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் மேடையாக இலக்கிய உலகைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்.



பாதிரியார் ஜெகத் கஸ்பர் ராஜ"டன் இணைந்து "தமிழ் மையம்" ஆரம்பிக்கிறார். இளையராஜாவை வைத்து பெரும் பணச்செலவில் "திருவாசகம்" தயாரிக்கப்படுகிறது. கற்பு குறித்து குஷ்பு கருத்துத்தெரிவிக்க, அவருக்கு எதிராக தமிழ்நாட்டில் பலத்த கண்டனங்கள் எழுந்தன. அந்த நேரத்தில் தான் கனிமொழி, மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துடன் இணைந்து "கருத்து" என்கின்ற பெயரில் இணைய தளம் ஒன்றைத் தொடங்கினார்.

நேரடியாக கட்சிக்குள் வராமல் இப்படி மெல்ல மெல்ல தன்னை முன்னிறுத்திக் கொள்ள ஆரம்பித்தார் கனிமொழி. டெல்லியில் மத்திய அமைச்சர்கள் பெரும் செல்வாக்கோடு இருந்ததால் அவர்களில் யாரையாவது தன்பக்கம் இழுக்க முயற்சிக்கிறது சி.ஐ.டி காலனி. பெரிய பின்புலம் ஏதுமில்லாத மத்திய அமைச்சர் ஆ.ராசாவும் சி.ஐ.டி காலனி குடும்பம் தனக்கு ஆதரவாக இருக்கும் என நம்புகிறார். இதுதான் ராசா சி.ஐ.டி காலணியில் ஐக்கியமான கதை.

ராசா வனத்துறை அமைச்சராக இருந்தபோதே, ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தொடர்புடைய கட்டுமான நிறுவனங்கள் மும்பையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்குகிறார். இதன்மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டு சி.ஐ.டி காலனியோடு ராசா நெருக்கமானதாக சொல்லப்படுகிறது.

2006இல் தி.மு.க மறுபடியும் தமிழ்நாட்டில் ஆட்சியைப்பிடிக்க, அப்போது சி.ஐ.டி காலனி தனி அதிகார மையமாக மாறியிருந்தது. ராஜாத்தி அம்மாளுக்கு ஆதரவான ஐ.ஏ.எஸ் - ஐ.பி.எஸ் அதிகாரிகள் என பெயர்கள் அடிபடத்தொடங்கின.

2007 ஜனவரியில் கனிமொழியின் தமிழ் மையம் "சங்கமம்" நிகழ்ச்சியை நடத்துகிறது. அப்போது தமிழக சுற்றுலாத்துறை சார்பில் கனிமொழி பெயரிட்டு அரசு ஆணை அனுப்பப்படுகிறது. தொடர்ந்த ஆண்டுகளில் சங்கமம் நிகழ்ச்சியும், தமிழ் மையம் சார்பில் மாரத்தான் போட்டிகளும் கோலாகலமாக நடத்தப்பட்டன. இதில் ஸ்பான்ஸர் செய்திருந்த நிறுவனங்களில் பெருமளவு ஸ்பெக்ட்ரம் ஊழலில் சம்மந்தப்பட்டிருப்பதாக இப்போது சொல்கிறது சி.பி.ஐ.

தினகரன் மதுரை அலுவலகம் எரிப்பைத் தொடர்ந்து மாறன் சகோதரர்களுக்கும் கோபால புரத்திற்கும் முட்டிக் கொண்டது. மாறனின் மத்திய அமைச்சர் பதவி பிடுங்கப்பட டெல்லியில் தி.மு.க வின் தீர்மானிக்கும் பொறுப்பை கனிமொழிக்குக் கொடுத்தார் கருணாநிதி.

2007 இல் கனிமொழி ராஜ்யசபா எம்.பி யாக டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன்பிறகு வேலை வாய்ப்பு முகாம் என தமிழகத்திலும் கட்சிரீதியாக தன்னை வலுப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார் கனிமொழி. கட்சியில் தனக்கென ஒரு குழுவை உருவாக்கத் தொடங்கினார்.

டெல்லியில் ஆ.ராசா மூலம் கனிமொழிக்கு ஏராளமான தொடர்புகள் கிடைக்கின்றன. சரத்பவார், அவரது மகள் சுப்ரியா அவர்கள் மூலம் ஷாகித் பல்வா, நீரா ராடியா என தொடர்புகள் கிடைக்கிறது. டெல்லியின் செல்வாக்கான இடங்களில் கிடைத்த தொடர்புகள் அவரை யோசிக்க விடாமல் செய்கிறது. இந்த நேரத்தில் கலைஞர் டி.வி. ஆரம்பிக்கும் வேலையையும் கனிமொழியிடம் கருணாநிதி கொடுக்கிறார்.

ஸ்பெக்ட்ரம் பணம் 214 கோடி ரூபாய் கலைஞர் டி.வி. யாக உருமாறுகிறது. இந்த இடங்களில்தான் கனிமொழி தவறு செய்கிறார். சிறிய குழந்தைக்கு கைக்கடங்காத இனிப்புகளைக் கொடுத்தால் அது எப்படி நடந்து கொள்ளுமோ அப்படியே கனிமொழியும் நடந்து கொள்கிறார். சொந்த அப்பாவைக்கூட நம்பாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கிறார். அவர் கருணாநிதியை நம்பியிருந்தால் மாட்டிக் கொள்ளாமல் எப்படி தவறு செய்வது என்று அவர் சொல்லிக் கொடுத்திருப்பார். இன்று திகார் செல்ல வேண்டிய நிலை வந்திருக்காது.

மென்மையான, மனித உரிமைகளில் ஆர்வம் கொண்ட பெண் என்கிற வகையில் ஈழ ஆதரவாளர்கள் கனிமொழி மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் ஈழவிவகாரத்திலும் கனிமொழி துரோகம்தான் செய்தார். இலங்கையில் போரை நிறுத்தக்கோரி தமிழகத்தில் முதல் போராட்டத்தை 2008 அக்டோபர் மாதம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சென்னையில் தொடங்கியது. தொடர்ச்சியாக தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெறத் தொடங்கின. கவிஞர், எழுத்தாளர் என்கிற பெயரில் இந்த போராட்டத்தையும் கனிமொழி கையில் எடுக்கிறார்.

கனிமொழியின் தொடர் ஈழ ஆதரவுப் போராட்டங்களை நம்பி, போரின் கடைசி வாரத்தில் புலிகள் கனிமொழியைத் தொடர்பு கொண்டார்கள். சரணடைய வந்தவர்கள் இவரை நம்பி உயிரைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

கனிமொழியின் இந்த அசுர வளர்ச்சி கோபாலபுரம் குடும்பத்திற்கு எரிச்சலை அதிகப்படுத்தியது மாறன் சகோதரர்களும் கோபாலபுரத்துடன் நெருக்கமாகி விட, குடும்பத்திற்குள்ளேயே கனிமொழிக்கு எதிரிகள் அதிகமானார்கள். கனிமொழி தான், என் அண்ணன், என் பெரியம்மா என்றெல்லாம் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் யாரும் இவரை அணுக்கமாக நினைக்கவில்லை. இன்றைக்கு சிறையில் இருக்கும் கனிமொழிக்காக கோபாலபுரத்தில் கருணாநிதியைத் தவிர யாரும் வருத்தப்படவில்லை. "கனிமொழியின் இந்த நிலை திராவிட அரசியலில் பெண்ணின் இடத்தையும், முக்கியத்துவத்தையும் கேள்விக்குறியாக்கி உள்ளது" என்கிறார் கவிஞர் மாலதி மைத்ரி. "பெரியார் பாசறையில் இருந்து வந்த கருணாநிதியின் மோசமான நடத்தையினாலும், குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கத்தாலும் இன்று கனிமொழி பலியாகி இருக்கிறார்.

கருணாநிதியின் தவறான முன்னுதாரணத்தினால் கனிமொழிக்கு சமூகத்திலும், அரசியலிலும் அடையாளம் மறுக்கப்பட்டிருந்தது. பால்ய வயதில் கருணாநிதிதான் தன் தந்தை என கனிமொழியால் வெளியிப்படையாகச் சொல்ல முடியவில்லை. பிற்காலத்தில் அரசியலுக்கு வந்த பிறகு தன் குடும்ப உறுப்பினர்களுடன் போட்டிபோட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்.

அதிகார போதையும், ஜெயித்தே ஆகவேண்டும் என்கிற வெறியும் இன்று அவரை சிறைக்கு அனுப்பியிருக்கிறது. அவருடைய நண்பர்களும் தன்னுடைய இலாபத்துக்காக அவரது துதிபாடிகளாகவே இருந்து விட்டது கனிமொழியின் துரதிஷ்டம் தான்" என்கிறார் மாலதி மைத்ரி.

அடையாளம் மறுக்கப்பட்ட ஒரு பெண்ணாக, ஒரு எழுத்தாளராக, ஒரு அரசியல்வாதியாக, இன்று சிறைவாசியாக... கனிமொழி எழுதிய கவிதை ஒன்றைக் குறிப்பிட்டால் சரியாக இருக்கும்.



"அப்பா சொன்னாரென
பள்ளிக்குச் சென்றேன்
தலை சீவிக் கொண்டேன்
நண்பர்களைத் தவிர்த்தேன்
கல்யாணம் கட்டிக் கொண்டேன்
காத்திருக்கிறேன் என்முறை வருமென்று..."

**ப்ரியா தம்பி**

**நன்றி :- குமுதம்**

# வடக்கிற்கும் தெற்கிற்கும் உறவுப்பாலம்

### இந்து. பௌத்த கலாசார பேரவை அங்குரார்ப்பணம்

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும். "இன, மத வேறுபாடற்ற ஒரு சமுதாயம் உருவாகவேண்டும்" என்ற அடிப்படைக் கோட்பாட்டிற்கு அமைவாக 23.05.2011 அன்று இல: 29, பழம் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் வைபவரீதியாக இந்து, பௌத்த கலாசார பேரவை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு இந்து, பௌத்த கலாசார விவகாரங்களுக்கான



இணைப்புச் செயலாளரும் மேதகு ஜனாதிபதி அவர்களின் புலம்பெயர்ந்த மக்களுக்கான கௌரவ ஆலோசகரும் இணைப்பாளரும் Eu Lanka Forum நிறுவனத்தின் தலைவருமான திரு. M.T.S இராமச்சந்திரன் அவர்களின் முயற்சியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு வடமாகாண ஆளுநர் ஜெனரல் G.A. சந்திரசிறி, யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க, வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்களும் மேலும் பல புத்த பிக்குகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச உயர் அதிகாரிகளும் தெற்கிலிருந்து வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

யாழ். மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழக பேராசிரியர் S.சிவலிங்கராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி ம.வேதநாதன், கலாநிதி திருமதி இராமநாதன் உட்பட கல்விச் சமூகத்தினர், ஆலயக் குருமார்கள், சமயப் பெரியார்கள், ஆன்மீகவாதிகள், சமய ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டமை சிறப்பான அம்சமாக இருந்தது.

இந்து, பௌத்த கலாசார பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வும் இதன் நோக்கம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வும் அதன் இணைப்புச் செயலாளர் திரு. M.T.S . இராமச்சந்திரன் அவர்க ளின் ஒழுங்குபடுத்தலுக்கு அமை வாக பகுதி பகுதியாக இடம்பெற் றது.

இதன் முதற்கட்டமாக கலாசாரப் பேரவையின் அங்குரார்ப்பண ஆரம்ப பூசை நிகழ்வு அருள்மிகு வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகியது.

### ஆரம்ப பூஜை நிகழ்வு

இந்து கலாசார பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்விற்கு முன் ஆரம்ப பூசை நிகழ்வு அருள்மிகு வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில், இந்து கலாசார முறைப்படி சுமார் 10.00 மணியளவில் ஆரம்பமாகியது.

இந் நிகழ்விற்கு வருகை தந்த வடமாகாண ஆளுநர் ஜெனரல் G.A. சந்திரசிறி அவர்களையும் வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) இவர்களுடன் தெற்கில் இருந்துவந்த ஏனைய புத்த பிக்குகள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரணி மகாவித்தியாலய மாணவிகளின் "பாண்ட்". வாத்திய இசையுடன் சுட்டிபுரம் அம்மன் ஆலய முன்றல் வரை அழைத்து வரப்பட்டனர். ஆலய முன்றலில் இருந்து மங்கள நாதஸ்வர இசையுடன் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் ஆரம்பப் பூசையில் மகிழ்வுடன் கலந்து கொண்டனர்.

தெற்கிலிருந்து வருகை தந்த பௌத்த பிக்குகள் எமது இந்து சமய குருக்கள், ஆலய நிர்வாகிகளுடன் மிக அந்நியோன்னியமாக பழகி



நட்புறவாடியதை, வருகை தந்திருந்த பலரும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

### மேலும் வடமாகாண ஆளுநர் ஜெனரல் G.A. சந்திரசிறி அவர்கள், தமது உரையில்:

இன்று இப்படியான ஒரு நிகழ்வினை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இன, மத பேதம் இன்றி அனைவரும் இணைந்து கொள்வதற்கு சமத்துவமான ஒரு அமைப்பினை ஏற்படுத்தி எதிர்கால சமாதானத்திற்கு வித்திட்ட திரு. M.T.S இராமச்சந்திரன், வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்கள் இருவரையும் நான் மிகவும் பாராட்ட விரும்புகின்றேன். மேலும் திரு. M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் இத்தகைய பணிகள் மேலும் தொடர வேண்டும் என விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

வணக்கத்துக்கரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்கள் தனது உரையில், திரு M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் சமூக நோக்கு ஒரு வித்தியாசமானது. அறிவியல் ரீதியானதும் இன, மத வேறுபாடும் அற்ற ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க என்ன செய்ய வேண்டும்? அச் செயற்பாடுகளை எப்படி முன்னெடுத்து செல்ல வேண்டும்? என்பதை மிகவும் அவதானமாக ஆராய்ந்து அதற்கேற்ப தனது செயற்பாடுகளைத் துணிந்து செயற்படுத்த பின்னிற்காதவர், இவருடைய சுவடுகளை ஏனைய புத்திஜிவிகளும் பின்பற்றினால் நாட்டில் ஆரோக்கியமான ஒரு சமூகம் உருவாகும் என்று குறிப்பிட்டார்.

உடுநுவர இந்ர ரத்ன தேரர் தனது உரையில், நாம் சிங்களவர். நீங்கள் தமிழர்கள். ஆனால், நாங்கள் எல்லோரும் மக்கள், அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களே, ஒரே நாட்டைச் சோந்தவர்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்தால் நாட்டில் பிரச்சினையே இருக்காது என்று குறிப்பிட்டார்.

### இந்து, பௌத்த கலாசார பேரவையின் அலுவலக திறப்பு விழா

வரணி சுட்டிபுர அம்பாள் ஆலய ஆரம்ப பூசை விழா முடிவுற்ற பின்னர் பிற்பகல் சுமார் 1.30 மணிக்கு இல: 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் இந்து, பௌத்த கலாசாரப் பேரவை அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு விசேட விருந்தினராக வருகை தந்திருந்த யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர். ஜெனரல் மகிந்த கத்துருசிங்க அவர்களையும், வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்களையும் ஏணையவர்களையும் பலாலி வீதியிலிருந்து வரணி மகாவித்தியாலய மாணவிகளின் பாண்ட் வாத்திய இசைக்குழுவினரால் அழைத்து வரப்பட்டனர். இதன் பின் இவர்களினால் இந்து பௌத்த கலாசார பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினர் யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர்



ஜெனரல் மகிந்த கத்துருசிங்க அவர்கள் தனது உரையில்: உங்கள் எல்லோரையும் நான் ஒரு சகோதர சகோதரிகளாகவே பார்க்கின்றேன். நான் உங்களில் ஒருவனாகவே இருக்க விரும்புகின்றேன். ஆனால் எனது பதவிநிலை உங்களைப் போன்று ஒரு சாதாரண சிவிலியநாக இணைவதற்கு தடையாக உள்ளது. எனது விருப்பம் துவேஷம் எதுவும் அற்ற ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதுதான். அதற்கு இப்படியான முயற்சிகள் மிகவும் பிரயோசனமாக அமையும். இதை ஒழுங்கு செய்த திரு M.T.S. இராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன் என்றார்.

இந்த நிகழ்வில் இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க அவர்களின் கருத்தைத் தொடர்ந்து வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்களும் திரு M.T.S. இராமச்சந்திரன் அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

இந்து, பௌத்த கலாசார பேரவை அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் கலந்துரையாடல் நிகழ்விற்கு அழைத்து வரப்பட்டனர்.

### கலந்துரையாடல் நிகழ்வு

வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்களுடன் தெற்கிலிருந்து வருகை தந்த பௌத்த குருமார்களும் ஏனைய இந்து சமய குருக்களும், சமயத் தொண்டர்கள், ஆன்மீகவாதிகள், புத்திஜீவிகள் மற்றும் பல சமய ஆர்வலர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்வு சுமார் 3.30 மணியளவில் "Green Grass Hotel" இல் நடைபெற்றது. இக் கலந்துரையாடல் மண்டபம் கல்விமான்கள் சமூகத்தால் களைகட்டியிருந்தது. இக் கலந்துரையாடலின் போது இந்து சமயத் தமிழர்கள் பலரிடம் தோன்றியுள்ள பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

1. யாழ்.மாவட்டத்தில் பௌத்த மதத்தை நிறுவும் நோக்கில் சில தனியார் காணிகளில் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளதே?

இதற்கு பதிலளித்த வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்கள் அண்மையில் களனியில் ஓர் இந்துக் கோயில் சுமார் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதையும் அதற்கு சிங்கள மக்களிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் ஆனாலும் தாங்கள் கேட்கும் கேள்வி அர்த்தம் உள்ளது எனவும் அப்படியான நடவடிக்கை நடைபெற்றிருந்தால் அதை நேரடியாக எனது கவனத்திற்கு கொண்டுவரும்படியும் தவறின் இல.29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்து, பௌத்த கலாசார பேரவையின் கவனத்திற்கு கொண்டுவருமாறு பதிலளித்தார்.



2. இந்து மதமும் பௌத்த மதமும் இருவேறு பாதைகளாக இணைந்து கொள்ள முடியாத புகையிரத தண்டவாளங்களைப் போல இருப்பதனால் இந்த, இந்து பௌத்த கலாசார பேரவையின் செயற்பாடுகள் நடைமுறைச்சாத்தியம் அற்றதாகவே உள்ளதே?

எல்லா மதங்களும் பல வேறுபாடுகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது.

இனங்கக்கூடியதாக இனங்கண்டு இணங்கிச் செல்லும் போது நாளடைவில் இப் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும் எனக் கூறினார்.

### திரு M.T.S.இராமச்சந்திரன் உரை:

**திரு M.T.S.இராமச்சந்திரன் தனது உரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டார்.**

புத்தரின் தத்துவத்தையும் அறி நெறிக் கொள்கைகளையும் பின்பற்றுவதே பௌத்தம் ஆகும். ஆனால் புத்தர் ஒரு சிங்களவர் அல்லர். பௌத்த மதத்தை இந்தியா, சீனா, தாய்லாந்து போன்ற நாட்டவரும் பின்பற்றுகின்றனர். ஆனால் அவர்கள் சிங்கள இனத்தை சேர்ந்தவர்கள் அல்லர். இதை நாங்கள் நன்கு உணர வேண்டும். இந்த இந்து, பௌத்த கலாசார பேரவை ஓர் அரசியல் பின்னணியைக் கொண்டதாக பலரும் சந்தேகிக்கின்றனர்.

இது பற்றி நான் கூறவிரும்புவது யாதெனில், இந்த கலாசார பேரவையின் போஷகரான மேதகு மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியைச் சேர்ந்தவர். இந்த கலாசார பேரவையின் தலைவர் கட்சியைச் சேர்ந்தவர். இந்த கலாசார பேரவையின் தலைவர் வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்கள் வெறல உறுமய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்.

இச் சபையின் செயலாளர் திரு M.T.S.இராமச்சந்திரன் அவர்கள் எந்தக் கட்சியையும் சேராத ஒரு தனி மனிதன். இவற்றைசரியாக உற்று நோக்குபவர்கள் இதில் அரசியல் பின்னணி இருக்கின்றதா? இல்லையா? என்பதை புரிந்து கொள்வார்கள்.


சமாதான நோக்கு ஒன்றை மையப்படுத்தி ஆரோக்கியமான பாதையில் செல்வதாக நான் கருதுகின்றேன். எனது கருத்து மிகவும் தெளிவானது. கறுப்புக் கண்ணாடியை அணிந்து பார்ப்பவர்களுக்கு வெள்ளைப் பொருளும் கறுப்பாகவே தெரியும். இந்த கலாசார பேரவையின் ஊடாக எமது சமுதாயத்திற்கு தேவையான சேவைகளைச் செய்வதும் தேவைகளை நிறைவேற்றுவதுமே எனது பிரதான நோக்கமாகும் என்று குறிப்பிட்டார்.

### ஆலோசனைக்குழு

இக் கலாசார பேரவைக்கு ஓர் ஆலோசனை சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இச்சபையின் இணைப்புச் செயலாளர் திரு M.T.S. இராமச்சந்திரன் ஊடாக இந்து, பௌத்த கலாசார பேரவையின் தலைவர் வணக்கத்துக்குரிய அதுரலிய ரதன தேரர் (M.P) அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் மேதகு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களைச் சந்தித்து கலந்துரையாட ஒழுங்குகள் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக்குழுவின் இணைப்புச் செயலாளராக திரு S.சிவலிங்கராஜா அவர்கள் இப் பேரவையின் செயற்பாடுகளை வழிநடத்தி செல்வார் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (சி-3290)

# லிபியாவின் இராணுவமையங்கள் மீது நேட்டோ படைகள் தொடர் குண்டுமழை



(டிரிபோலி)

லிபியத் தலைநகர் டிரிபோலியில் இது வரை இல்லாத அளவிற்கு நேட்டோ விமானப் படைகள் நேற்று முன்தினம் குண்டுமழை பொழிந்தன. குறிப்பாக லிபியத் தலைவர் கடாபியின் குடியிருப்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்தக் குண்டு வீச்சுக்கள் நிகழ்ந்தன. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயம் அடைந்தனர்.

லிபியாவில் அதன் ஜனாதிபதி கடாபி பதவியை விட்டு விலகக் கோரி மக்கள் மற்றும் இராணுவத்தின் ஒரு பிரிவினர் இணைந்து கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாகப் போராடி வருகின்றனர். எதிர்த் தரப்பினருக்கு உதவுவதற்காக ஐ.நா. வின் தீர்மானத்தை நிறைவேற்ற கடந்த மார்ச் 31 முதல் நேட்டோ அமைப்பு களத்தில் குதித்தது.

இதுவரை இல்லாத அளவிற்கு நேற்று நேட்டோ விமானப் படைகள் கடாபியின் இராணுவ மையங்களின் மீது குண்டு மழை பொழிந்து தள்ளியது. அரைமணி நேரத்திற்குள் 12 இல் இருந்து 18 முறை ஒரே இடத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டன.

மேலும் கடாபியின் குடியிருப்பான பாப் அல் அஜீசியாவைச் சுற்றிலும் உள்ள இராணுவ மையங்கள், கட்டடங்கள் , வாகனங்கள் என அனைத்தும் நேற்று முன்தினம் குண்டு வீச்சுக்கு இலக்காகின. அதில் இராணுவத்தில் பணியாற்றி வந்த தன்னார்வத் தொண்டர்கள் தங்கியிருந்த ஒரு கட்டடம் மிக மோசமாக சேதம் அடைந்தது.

இதுகுறித்து லிபிய அரசு செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராஹிம் தனது அறிக்கையில், அக்கட்டடத்தில் இராணுவ வீரர்கள் ஒருவரும் இல்லை. அப்பாவி மக்கள் மூன்று பேர் பலியாகினர். 15 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என்று கூறினார்.

பல மாதங்களாக கடாபி இராணுவப் பிடியில் இருந்த மிஸ்ரட்டா நகரை மீட்டதைத் தவிர எதிர்த்தரப்பால் இப்போரில் குறிப்பிடத் தக்க அளவில் முன்னேற முடியவில்லை.

தங்கள் தரப்புக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டுவதற்காக பெங்காசியில் இயங்கி வரும் இடைக்கால அரசின் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் கடந்த 23 ஆம் திகதி துருக்கிக்கும் அதைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கும் சென்று அந்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

பிரிட்டன், பிரான்ஸ் , கம்பியா, இத்தாலி மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் மட்டும் தற்போது லிபிய இடைக்கால அரசை அங்கீகரித்துள்ளன. ஐரோப்பிய யூனியன் இரு நாட்களுக்கு முன் பெங்காசியில் தன் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்ததன் மூலம் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில்,அமெரிக்க வெளியுறவுத் துறை துணைச் செயலர் ஜெப்ரி பெல்ட்மென் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், வோஷிங்டனில் லிபிய இடைக்கால அரசின் அலுவலகம் ஒன்றைத் திறக்க அழைப்பு விடுத்திருந்தோம். அவர்கள் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர். லிபிய அரசின் சொத்துக்கள் மீதான அமெரிக்காவின் தடை விரைவில் நீங்கும். மனிதாபிமான உதவிகளுக்காக அவை பயன்படுத்தப்படும் என நம்புகிறோம் என்று கூறினார். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் பொலிஸ் நிலையம் மீது கார்க் குண்டுத் தாக்குதல்

## 2 பொலிஸார் பலி; 18 பேர் காயம்

(பெஷாவர்)

பாகிஸ்தானில் அல்கொய்தா தீவிரவாத இயக்க தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையில் தீவிரவாதிகள் இறங்கியுள்ளானர். கராச்சியில் உள்ள கப்பற்படை விமான தளத்தில் புகுந்த தீவிரவாதிகள் அதிரடி தாக்குதல் நடத்தினர். அதிநவீன போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. 11 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

அதற்கு முன்னதாக அமெரிக்க துணைத் தூதரக அதிகாரியின் மீது வெடிகுண்டு வீசி தாக்கினர். அதில் ஒருவர் பலியானார். 12 பேர் காயமடைந்தனர்.இந்த நிலையில் சைபர் பக்துன்கவா மாகாணத்தில் உள்ள பெஷாவரில் பொலிஸ்நிலையம்மீது இன்று அதிகாலை 4.45 மணியளவில் தற்கொலை படை தீவிரவாதிகள் கார்க் குண்டு தாக்குதல் நடத்தினார்கள்.

இந்த பொலிஸ் நிலையம் பல்கலைக் கழக வீதியிலுள்ளது. காரை வேகமாக ஓட்டி வந்த தீவிரவாதி பொலிஸ் நிலைய கட்டடம் மீது மோதினான். அதில் பொலிஸ் நிலைய கட்டடம் இடிந்து தரை மட்டமானது.

மேலும் அதன் அருகேயுள்ள குற்றப் புலனாய்வுதுறை கட்டடமும் இடிந்தது. இதை தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி 2 பொலிஸார் அதே இடத்தில் இடத்தில் பலியானார்கள். தகவல் அறிந்ததும் பொலிஸாரும் மீட்புப் படையினரும் அங்கு விரைந்து வந்தனர். இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 18 பேரை மீட்டனர். (ஸ்ரீ-2)

# அமெரிக்காவில் வீசிய சுழற்காற்றில் உயிரிழந்தோர் 116 ஆக உயர்வு

(சிகாகோ)



அமெரிக்காவில் தென்கிழக்குப் பகுதியில் வீசிய பலமான சுழற்காற்றில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் தென்பகுதி மாநிலம் மிசூரியில் ஜோப்லின் நகர்ப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பலமான சுழற்காற்று (டொர்னேடோ) வீசியது. இதன் வேகம் மணிக்கு 300 கி.மீ. வரை இருந்தது என வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடும் சுழற்காற்றின் பாதையில் சிக்கிய எல்லாவற்றையும் சுருட்டியெடுத்து தரைமட்டமாக்கியது.

வீடுகள், கடைகள் அடியோடு பெயர்க்கப்பட்டன. வாகனங்கள் தூக்கி வீசப்பட்டன. ஒரு பாடசாலை இந்தச் சுழற்காற்றில் சிக்கித் தகர்ந்தது. ஜோப்லின் நகரின் இரு வைத்தியசாலைகளில் ஒன்று மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அதில் இருந்தவர்கள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டனர். மாநில ஆளுநர் ஜே நிக்ஸன் நேரடியாக மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டு வருகிறார்.

இதனிடையே டெக்ஸஸ் ஓக்லஹோமா, ஆர்கன்ஸ், மிசூரி, நெப்ராஸ்கா ஆகிய மாநிலங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் சுழற்காற்று வீசக்கூடும் என தேசிய வானிலை சேவை நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்த மாநிலங்களின் பல முக்கிய நகரங்களில் சுழற்காற்று வீசும் ஆபத்துள்ளதாக புயல் எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# பால்தாக்ரேவை கொல்ல ஐ.எஸ்.ஐ.சதித்திட்டம்

## ஹெட்லி திடுக்கிடும் தகவல்

சிவசேனா கட்சி தலைவர் பால்தாக்கரேவை கொலை செய்ய ஐ.எஸ்.ஐ.உளவு நிறுவனம் திட்டம் தீட்டியதாக பயங்கரவாதி டேவிட் கோல்மேன் ஹெட்லி நேற்று முன்தினம் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும்சிவசேனாவின்அப்போதையபி.ஆர். ஓ.ராஜாராம் ஜெகேவையும் சந்தித்ததாக டேவிட் ஹெட்லி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடந்து வரும் மும்பை தாக்குதல் பற்றிய வழக்கில் கடந்த 23 ஆம் திகதி விசாரிக்கப்பட்ட முக்கிய குற்றவாளி டேவிட் ஹெட்லி ஐ.எஸ்.ஐ இற்கும் லஷ்கர் -இ-தொய்பா பயங்கரவாத அமைப்புக்கும் இடையிலான தொடர்புகளை பற்றி விரிவாக கூறியுள்ளார்.

அதை உறுதி செய்யும் விதத்தில் பாக். இராணுவத்தின் உயர் அதிகாரிகள் இருவர் மற்றும் வேறு சிலரின் தொலைபேசி எண்கள் கொண்ட ஹெட்லியின் சிறு நாட்குறிப்பேடு நேற்று முன்தினம் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டது. இதன் மூலம் பாகிஸ்தானில் இரட்டைவேடம் அம்பலமாகியுள்ளது. (ஸ்ரீ-2)



இங்கிலாந்து சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்சேல் ஒபாமா ஆகியோர் அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூன், அவரது மனைவி சமந்தா கமரூன் தம்பதியினரை லண்டனில் உள்ள பிரதமர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# கராச்சி கடற்படைத் தள தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவமும் உடந்தை

## பாகிஸ்தான் ஊடகங்கள் விமர்சனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள கடற்படை தளத்தில் ஆறு பயங்கரவாதிகள் நுழைந்தது குறித்து பாகிஸ்தான் பத்திரிகைகள் அந்நாட்டு இராணுவத்தை ஏளனம் செய்துள்ளன.

அதோடு இச்சம்பவம் இராணுவத்தின் துணையோடு தான் நடந்திருக்க வேண்டும் என்றும் குற்றம் சாட்டியுள்ளன. பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள பி.என். எஸ். மெஹ்ரான் கடற்படை தளத்தில் 22 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் பயங்கரவாதிகள் உள்நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

முதலில் 20 பேர் வந்திருக்கக் கூடும் என்று கருதப்பட்டது. ஆனால், அதன்பின் வெளியான தகவல்களின்படி நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவர் தப்பியோடி விட்டனர்.

இச்சம்பவம் குறித்து பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் கூறப்பட்டிருப்பதாவது, அரசியல் வாய்ச்சவடாலோ அமைச்சரவைக் கூட்டமோ இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இது மிகப் பெரிய தோல்வி. இதன் மூலம் நமக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது என்பது வெளிப்பட்டு விட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க வலிமையான தலைமை வேண்டும்.

இச்சம்பவம் பாதுகாப்பில் உள்ள பலவீனத்தைக் காட்டுகின்றது. தலிபான் பயங்கரவாதிகளுக்கு கடற்படை தளத்தில் இருந்து உளவுத் தகவலல்கள் கிடைத்திருக்க வேண்டும். ஏற்கனவே நடந்த பல தாக்குதல்களில் பாதுகாப்பு வீரர்களுக்குத் தொடர்பு இருந்தது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் இக்கருத்தை நிராகரிக்க முடியாது என பாகிஸ்தான் பத்திரிகைகளில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

பேய்க்குப் பார்த்து தாய்க்கு விட்டானாம்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்கள் ஊடாக எங்களை அழிக்கும் மகா தத்துவம் அரங்கேறுகிறது

இங்கு என்னதான் நடக்கிறது? இப்படி ஒரு பெரியவர் கேட்டார். ஏன் ஐயா அப்படிக் கேட்கிறீர்கள் என்றேன்.

அட தம்பி ஒருத்தனையும் நம்ப முடியவில்லை. எவர் எந்தப் பக்கம் என்று தெரியாமல் இருக்குது. அந்தக் காலத்தில பசுத்தோல் போர்த்த புலி என்றொரு பழமொழியிருந்தது. ஆனால் இப்ப பசுக்களும் புலித்தோல் போர்த்துக் கொண்டு விட்டன.

பசுக்களே புலித்தோல் போர்க்கின்ற அளவிற்கு நிலைமை மோசமாகிற்று என்றார் அந்தப் பெரியவர்.

நமக்கு எதுவும் விளங்கவில்லை. எனது விளக்கக்குறைவைப் பார்த்து அவர் சிரித்தார். ஐயா ஏன் சிரிக்கிறீர்கள் என்றேன்?

நீங்கள் இன்னமும் மானியகால சமுதாயத்து மக்களாகத்தான் இருக்கிறீர்கள் என்றார் அவர்.

அட! மானியகால சமுதாயம் என்பது அடிமைத்தனம் நிறைந்த, அறியாமை மலிந்த காலமன்றோ! அப்படியானால் ஏன் எங்களைப் பார்த்து இன்னமும் நீங்கள் மானியகால சமுதாயத்து மக்களாக இருக்கிறீர்கள் என்று அந்தப் பெரியவர் கூறினார்.

இந்த நினைப்பு நம்மை உறுத்த அந்தப் பெரியவரைப் பார்த்து ஐயா எதுவாயினும் விளக்கமாகக் கூறுங்கள் என்றேன்.

தம்பி, தமிழ்ப் பகுதியில் என்ன நடக்கிறது என்று உனக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. ஆனால் ஏதேதோ நடந்துகொண்டுதான் இருக்கிறது. இங்கு நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களுக்கும் மிகப் பெரிய பின்னணி உண்டு. ஆனால் எங்கட அரசியல்வாதிகள் இதுபற்றி எதுவும் கதைக்க மாட்டார்கள். பாவம் தமிழ் மக்கள். அவர்கள் என்ன செய்வது! உடைந்த வீட்டைக் கட்டவும், உயிரிழந்த உறவுகளுக்குத் திதி செய்யவும் முடியாமல் அல்லல்படும் அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது.

எல்லாம் போலித்தனமாகிவிட்டன. பதவி ஆசை தமிழனைப் போட்டுப் பாடாய்ப் படுத்துகிறது.

முன்பெல்லாம் தமிழர்களுக்கு சிங்களவர்களில் ஒரு பகுதியினர் தான் எதிராக இருந்தனர். ஆனால் இப்போது தமிழனுக்கு தமிழனே எதிரியாயிற்றான்.

இன்னும் ஒரு சில வருடங்கள் கடந்தால் நாங்களே எங்களை அடித்துக் கொள்வோம். எங்களை- எங்கள் இனத்தை அழிப்பதற்கு நாங்களே எங்களை அழித்துக்கொள்ளும் மகா தத்துவம் மகத்தான வெற்றிதரும்.

அந்தத் தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

அந்தத் திட்டத்தையும் தமிழர்களே நிறைவேற்றவுள்ளனர்.

ஈழத் தமிழினமே! உனக்குள் இப்படியொரு கயமைத்தனம் இருக்கும் என்றால் உன் எழுச்சி எப்படிச் சாத்தியமாகும்? உன்னைப் பெற்ற தாயைக் கொன்று பகைக் கரத்தை பிடிக்கத் துணிந்தனையோ!

அந்தோ கொடுஞ்செயல் வேண்டாம். உன்னைப் பெற்ற தாயும் தமிழும் ஒன்றென்றறி.

உன்னிடமே நீ கேள்வி கேட்டுக்கொள். அந்தக் கேள்வி உனது நாடகம், நடிப்பு, வேடம் சரியா? நீதியா? நியாயமா? தகுமா? என்பதாக இருக்கட்டும்.

# ஓய்வூதிய சட்டமூலம் 2 மாதங்களில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்கும் சட்டம் தொடர்பில் குறைபாடுகள் இருப்பதாக எந்தத் தரப்பாவது சுட்டிக்காட்டினால் அது தொடர்பில் ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தயாராக இருக்கின்றது. அந்த வகையில் திருத்தங்களுடன் இன்னும் இரண்டு மாதங்களில் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும் என்று தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திபிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தனியார் துறையினருக்கு ஓய்வூதிய சட்டம் தொடர்பில் பலர் பல்வேறு விதமான கருத்துக்களை கொண்டுள்ளார். ஆனால் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை நல்லெண்ணத்துடனேயே கொண்டுவந்துள்ளது.

முக்கியமாக மஹிந்த சிந்தனையில் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளவாறு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டு இந்த திட்டம் கொண்டுவரப்படுகின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் போது பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. இந்த தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டத்தினால் ஊழியர் சேமலாப நிதிக்கோ, அல்லது ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கோ , சேவை நலக்கொடுப்பனவுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது.

ஊழியர் சேம இலாப நிதியை பெறுவதும் அதிகமானோர் அதனை குறுகிய காலத்தில் செலவு செய்து விடுகின்றனர். செலவு செய்வதற்கான தேவைகள் அவ்வாறு அமைகின்றன. எனவே தொழிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சாகும் வரை ஓய்வூதியம் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை அமைத்துள்ளோம்.

சேமலாப நிதியையும் பெற்றுக்கொண்டே இந்த புதிய ஓய்வூதியத்தையும் பெறலாம். ஒரு ஊழியர் 10 வருடங்கள் இந்த நிதியத்துக்கு பங்களிப்பு செய்தால் ஓய்வூதியம் பெற தகுதி பெற்றுவிடுவார். ஒருவேளை ஆறு வருடங்கள் மட்டுமே பங்களிப்பு செய்யப்பட்டது என்றால் எஞ்சிய நான்கு வருடங்களுக்கும் தேவையான நிதியை செலுத்திவிட்டு ஓய்வூதியத்தைப் பெறலாம். அத்துடன் ஒருவர் தொடர்ந்து 10 வருடங்கள் ஒரே நிறுவனத்தில் தொழில் புரிய வேண்டும் என கோரப்படவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் தொழில் புரிந்தாலும் 10 வருடங்கள் பங்களிப்பு செய்தால் ஓய்வூதியம் பெறலாம்.

இதற்கான பங்களிப்பு தொடர்பில் பலருக்கு தெளிவில்லாமல் இருக்கின்றதா? என்ற சந்தேகமும் ஏற்படுகின்றது. அதாவது ஊழியர் ஒருவர் தனது மாத சம்பளத்தில் இரண்டு வீதத்தை பங்களிப்பு செய்வார். அதே அளவுத் தொகையை நிறுவனமும் வழங்கும்.

அத்துடன் ஊழியரின் சேவை நலக் கொடுப்பனவில் 10 வீதமும் ஊழியர் சேமலாப நிதியில் இரண்டு வீதமும் பெறப்படும். இதனடிப்படையில் 10 வருடங்கள் பங்களிப்பு செய்யப்பட்டால் ஓய்வூதியம் பெறலாம்.

தற்போதைய நிலையில் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தத் திட்டத்திற்கு எந்த எதிர்ப்பையும் வெளியிடவில்லை. மாறாக சில தொழிற்சங்கங்களே எதிர்ப்பு வெளியிடுகின்றன.

ஓய்வூதியம் வழங்கும் சட்டம் தொடர்பில் குறைபாடுகள் இருப்பதாக எந்தத் தரப்பாவது சுட்டிக்காட்டினால் அது தொடர்பில் ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணி(M.Ed), ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி (MATE) கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமை உள்ளவர்கள் இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேலதிக விபரங்களை பிராந்திய நிலையத்தின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சத்திய தரிசனம்

### யுக அவதாரன்

①



ஸ்ரீராம் சிறந்ததோர் சாயி பக்தன். அவன் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் நிலையம் ஒன்றில் ஒரு சேவாதளத் தொண்டனாகப் பணி புரிகின்றான். தன் சேவைகள் தேவைப்படும் நேரங்களில் எல்லாம் அனைவருக்கும் முன்வந்து உதவுவது அவனது வழக்கமாக இருந்தது.

சத்யம்-தர்மம் -சாந்தி-பிரேமை-அஹிம்சை என்னும் சாயி தத்துவங்களில் அசையாத நம்பிக்கை கொண்டவன் ஸ்ரீராம்.

ஸ்ரீராமுக்கு தான் ஒரு தடவை புட்டபர்த்திக்கு செல்ல வேண்டும் என்றும் அங்கு போய் சாயிநாதனை நேரில் தரிசனம் செய்ய வேண்டும் என்றும் பெரு விருப்பொன்று மனதில் இருந்தது. ஆனால், அதற்குரிய பொருள் வசதி அவனிடம் இல்லை.

அதனால் ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குப் போகும் முன்னர் அவன் பகவானை வேண்டிப் பிரார்த்திப்பான்.

"பகவானே ! உங்களை நான் நேரில் கண்டு தரிசிப்பதற்கு எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று மனம் உருகி கேட்பான்.

பகவானின் காதுக்கு இவன் பிரார்த்தனை எட்டியது. ஸ்ரீராம் தன் பக்தனாக இருப்பதற்கு தகுதி பெற்றவன் தானா என்பதை பரிசோதிக்க அவர் விரும்பினார். அதனால் ஒருநாள் அவனது கனவில் வந்து தோன்றினார்.

இதுவரையிலும் படங்களில் மட்டுமே அவரைக் கண்டு வந்த ஸ்ரீராம் கனவில் முழு உருவாய் கண்டபோது பயந்து போய் விட்டான். அதனால் பதறிப் போய் அலறினான்.

"ஏன் மகனே அலறுகிறாய்?" பகவான் கேட்டார்.

"எனக்குப் பயமாய் இருக்கிறது சுவாமி!" ஸ்ரீராம் சொன்னான்.

"ஏன் நான் உனக்கு பூச்சாண்டி காட்டுகிறேனா?"

"என்னைக் கோபமாக பார்க்கிறீர்கள் சுவாமி!"

"இல்லையே! நான் உன்னை அன்பாகத் தானே பார்க்கிறேன்!"

"எனக்கு அப்படித் தெரியவில்லையே சுவாமி!"

"உன் பார்வையில் கோளாறு இருக்கிறது!"

"என் கண் பார்வை நன்றாகவே உள்ளது!"

"உன் மனதில் குற்றம் இருக்கிறது!"

"என் மனம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது சுவாமி?"

"பக்தர்களின் மனதை மட்டும் தான் நான் பார்க்கிறேன் மகனே!"

"அவர்களின் வடிவங்கள் உங்கள் கண்களுக்கு தெரிவதில்லையா?"

"உருவங்களை விட நல்ல உள்ளங்களே உயர்வானவை!"

"உள்ளத்தால் மட்டும் உங்களைத் தொழுதால் போதுமா சுவாமி?"

"ஆம், உண்மையான இறைஞ்

**சந்திரா தனபாலசிங்கம்**

சுதலுக்கு எனது நாமத்தை ஒரு தரம் நீ உச்சரித்தால் என் அனுக்கிரகம் உனக்கு கிடைக்கும் ஸ்ரீராம்"

"காணிக்கைகள், பழங்கள், மலர்கள், பிரசாதங்கள்..."

"நிறுத்து, நிறுத்து. அழுகிப் போகும் கனிகளையும் வாடி உதிரும் மலர்களையும் மதிப்பற்ற காசுகளையும் உன்னிடம் கேட்டுப் பெறுவதற்கு நான் இங்கே வரவில்லை தெரிந்து கொள்!"

(தொடரும்)

# பாடசாலை மாணவர்களுக்கான கவிதை,சித்திரப் போட்டி முடிவுகள்

"பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்" எனும் தொனிப்பொருளில் கரவெட்டி, மருதங்கேணி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சித்திர, கவிதைப்போட்டி முடிவுகள் அறிவிக் கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு.

**கரவெட்டிக் கோட்டம்**

**சித்திரப்போட்டி பிரிவு–I**

ர.சங்கவி (யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை), பி. இந்து (யா/ மணியகரன் தோட்டம் அ.த.க.பாடசாலை) ,க. துளசிகா (யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்)

**பிரிவு – II**

ர. ஆர்த்திகா( யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அ.அன்ரன்சைமன்(யா/ வதிரி இருதயக்கல்லூரி), கி.கேகஜன் ( யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**பிரிவு –III**

சி.கோபிகா ( யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), யோ.லக்சன் ( யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), பி.பிரேம்நாத் (யா/ வதிரி திருஇருதயக்கல்லூரி)

**பிரிவு –IV**

க.சிவசுதன் (யா/ கரணவாய் மகாவித்தியாலயம்), தி.தினேஷ் ( யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), இ.ஐஸ்வரியா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**பிரிவு – V**

மு. அபிராம் – ( யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), க. விபூசுதன்(யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சு.தூயவன் (யா/தேவரையாளி இந்துக்கல்லூரி)

**கவிதைப் போட்டி பிரிவு–I**

ச. அருள்ராஜ் (யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), இ.விதுர்னா (யா/ கரணவாய் மகாவித்தியாலயம்), யோ. சயந்தனா யா/ விக்கினேஸ்வராக்கல்லூரி)

**பிரிவு–II**

வி. சாளினி (யா/ கரணவாய் மகாவித்தியாலயம்), சி.மிதுனா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பு.பிரியந்தி (யா/ விக்கினேஸ் வராக்கல்லூரி)

**பிரிவு–III**

சி. அனுசியா ( யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), ச.வித்தகி( யா/ விக்கினேஸ்வராக்கல்லூரி), இ.வினோதினி (யா/ வதிரி திருஇருதயக்கல்லூரி)

சி.மேரிஜெனிற்றா ( யா/ விக்கினேஸ் வராக்கல்லூரி), பு.ஆர்த்தியா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பா.கௌரீசன் (யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

**மருதங்கேணிக் கோட்டம்**

**கவிதைப்போட்டி பிரிவு–I**

ஜெ. ஜெயவினிதன் (யா/ ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்), ஏ.டெனிசன் (யா/மணற்காடு றோ.க.த பாடசாலை), கே. துளகாசனா( யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்)

**பிரிவு–II**

என்.டினுஷா ( யா/மணற்காடு றோ.க.த பாடசாலை, ரி. பிருந்தா (யா/ ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்) , எஸ். அரிதாஸ் (யா/நாகர் கோவில் மகாவித்தியாலயம்

**பிரிவு–III**

ஆர். ராம்ஜி ( யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்),ஏ.சரண்சியா (யா/நாகர் கோவில் மகாவித்தியாலயம்), ஐ.பிரதீப் (யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்),

**பிரிவு–IV**

ஏ.அகிதா(யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்)

**சித்திரப்போட்டி பிரிவு–I**

என். அருள்நிலா (யா/மருதங்கேணி. இ.த. க.பாடசாலை), ஜெ.லவன்ராஜ் (யா/ தாளையடி றோ.க.த பாடசாலை), எஸ்.சரணியா(யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்),

**பிரிவு–II**

கே.சசிதரன் யா/மருதங்கேணி. இ.த. க.பாடசாலை), கே.டினுஷா (யா/மருதங்கேணி. இ.த. க.பாடசாலை), ரி.சுயித்தா (யா/ தாளையடி றோ.க.த பாடசாலை),

**பிரிவு–III**

எஸ்.கஜந் (யா/மருதங்கேணி. இ.த. க.பாடசாலை) ஏ.டிதர்சன் (யா/தாளையடி றோ.க.த.க பாடசாலை), என். மிதுசன் (யா/குடத்தனை கரையூர் அ.மி.த.கபாடசாலை),

**பிரிவு–IV**

ஏ.பிரசாந்தன் (யா/மணங்காடு றோ.க.த), ஜெ.ஜெயதர்சன் (யா/தாளையடி றோ.க.த பாடசாலை), ஆர்.சதீஸ் (யா/ வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்)

(ஸ்ரீ-19)

# இலங்கையில் புகைத்தல் காரணமாக நாளொன்றுக்கு 60 பேர் உயிரிழப்பு

மதுபானம், விபத்து,எயிட்ஸ், மோதல்கள், கொலை, தற்கொலை, போதைப்பொருள் ஆகியவற்றினால் ஏற்படும் உயிரிழப்பை விடக்கூடுதல் எண்ணிக்கையிலான உயிரிழப்பு புகைபிடிப்பதனால் ஏற்படுவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகா தெரிவித்தார்.

சிகரெட்டிலுள்ள நிக்கொட்டின் போதைப் பொருளைவிடக் கொடிய விஷம். இதன் விஷத் தன்மையை மக்கள் அறியாதமையும் மக்களுக்கு இது குறித்து போதிய அறிவுரைகள் வழங்கப்படாமையும் இதற்கான காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச புகைபிடித்தல் நிவாரண தினம் தொடர்பாக தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற கருத்தரங்கின் போதே பேராசிரியர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் புகைப்பிடித்தல் காரணமாக ஒரு நாளைக்கு சுமார் 60 பேர் உயிரிழக்கின்றனர். அதன்படி வருடத்துக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர்.

அதேபோன்று உலகில் ஒவ்வொரு 6.5 விநாடிகளுக்குமிடையில் ஒருவர் வீதம் மரணமாகின்றனர். உலக நாடுகளில் வருடத்துக்கு 60 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 80 இலட்சமாக அதிகரிக்கும் அதன் அடிப்படையில் 21 ஆம் நூற்றாண்டில்100 கோடியாக அதிகரிக்கும். டெங்கு நோய் தடுப்புக்காக பாரிய அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் அதைவிடக் கூடுதலாக புகைபிடித்தல் மூலம் உயிரிழப்பு ஏற்படுகின்றது. எனினும் இது குறித்து அந்த அளவுக்கு அச்சம் தெரிவிக்கப்படுவதில்லை.

ஒரு நாளைக்கு 60 பேர் உயிரிழந்த போதிலும் சிகரெட் உற்பத்தியிலும் விற்பனையிலும் வீழ்ச்சி ஏற்படுவதில்லை. அவ்வாறாயின் 60 பேர் உயிரிழக்கும் அதேவேளையில் புதிதாக 60 பேர் புகைபிடித்தலுக்கு ஆளாகின்றனர்.

இலங்கையில் சிகரெட் விற்பனையால் அரசாங்கத்துக்கு 12 வீதம் வருமானம் கிட்டுகின்றது. அதேவேளை புகைபிடித்தலால் ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சைக்காக அரசாங்கத்துக்கு 22 வீதம் செலவு ஏற்படுகிறது.

சமுர்த்திக் கொடுப்பனவு பெறுகின்றவர்களின் நன்மைக்காக அரசாங்கம் 840 கோடி ரூபாவை ஒதுக்குகின்ற அதேநேரத்தில் சமுர்த்தி கொடுப்பனவு பெறும் குடும்பங்கள் சிகரெட் புகைத்தலுக்கு மட்டும் 1825 கோடி ரூபாவை செலவிடுகின்றன.

இலங்கை மக்கள் புகைபிடிப்பதற்காக வருடத்துக்கு 5800 கோடி ரூபாவை செலவிடுகின்றனர் போன்ற பல தகவல்கள் இக்கருத்தரங்கின் போது முன்வைக்கப்பட்டன(ஸ்ரீ-2)

# பறைச்சேரி வெளிப்பகுதியிலுள்ள தனியார் காணிகளின் எல்லைகள் மீள்நிர்ணயம்

பறைச்சேரி வெளிப்பகுதியில் அமைந்துள்ள தனியார் காணிகளின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்து தருமாறு அப்பகுதி மக்களால் கோரப்பட்டுள்ளமையினால் அப்பகுதியில் காணிகள் அமைந்துள்ள சகல உரிமையாளர்களும் தமது காணிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்கும் படி யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ)

# மது போதையில் வாகனத்தை செலுத்தியவருக்கு அபராதம்

(கரவெட்டி)

வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 6500 ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை நகரப்பகுதியில் சம்பவதினம் வாகன அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் சென்ற சாரதிக்கெதிராக வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தை செலுத்த நீதிபதி உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

# உரமானியத்துக்கு அரசாங்கம் 50 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கீடு

## அனுமதிப்பத்திர நடைமுறையும் இரத்து

(கொழும்பு)

பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் உரமானியத்துக்கென அரசாங்கம் வருடத்துக்கு 50 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கி வருவதாக பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந் நாட்டில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு அரசாங்கம் எவ்வித அனுமதிப்பத்திரங்களுமின்றி தேவையான அளவு உரத்தை மானிய விலைக்கு வழங்கி வருகிறது.

அலரிமாளிகையில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க ஊடகத்தலைவர்களின் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் இந்தத்தகவல்களை தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி நல்ல வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் அதேவேளையில் பாவனையாளர்களுக்கும் நியாயமான விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வகை செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கம் இது வரைகாலமும் நடைமுறைப்படுத்தி வந்த அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் உரத்தை விநியோகிக்கும் நடைமுறையை அடியோடு இரத்துச் செய்து எவருக்கும் எந்தளவு தொகையையும் அரசாங்கம் ஒழுங்கு செய்துள்ளது. மானிய விலைக்கு வாங்குவதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கின்றது.

விவசாய பெருமக்கள் மானிய விலையில் விற்பனை செய்யும் உரத்தை அரசாங்கம் மற்றும் தனியார்துறை விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# முக்கிய பாலங்கள் தொடர்பில் நான்கு புதிய முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள முக்கிய பாலங்களின் படங்களை உள்ளடக்கிய நான்கு முத்திரைகளை வெளியிட இலங்கை தபால் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

பேராதனை தாவரவியல் பூங்காவில் உள்ள சங்கிலிப் பாலத்துக்கு அருகில் நாளை வெள்ளிக்கிழமை அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாந்து தலைமையில் நடைபெறவுள்ள விசேட வைபவம் ஒன்றில் இந்த நான்கு முத்திரைகளும் வெளியிடப்படும்.

மஹகந்தராவை கற்பாலம் –போகொடமரப்பாலம் – பேரதேனியா சங்கிலிப்பாலம் மற்றும் ருவான்வெல்ல உருக்குப்பாலம் என்பவற்றின் படங்கள் நான்கு புதிய முத்திரைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. 10 ரூபா பெறுமதி கொண்ட இரு முத்திரைகளும் 15 ரூபா பெறுமதி கொண்ட இரு முத்திரைகளுமே இவ்வாறு வெளியிடப்படவுள்ளன.


(ஸ்ரீ-2)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்
ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# இரண்டாவது தகுதிச் சுற்றில் மும்பை

# பெங்களூர் அணியுடன் நாளை மோதல்

## போராடித் தோற்றது கொல்கத்தா



(மும்பை)

முனாப் பட்டேல், பிலிசாட்டின் அபார ஆட்டத்தினால் மும்பை இந்தியன்ஸ் அணி 04 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி நாளை சென்னையில் நடைபெறும் இரண்டாவது தகுதிச் சுற்றில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை சந்திக்கிறது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.) அமைப்பின் 10 அணிகள் மோதும் நான்காவது இருபது- 20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் மும்பையில் நேற்று நடைபெற்ற பிளே ஓப் சுற்றின் எலிமினேட்டர் போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஆரம்பத்தில் 5.3 ஓவர்களில் 20 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 04 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

எனினும் அடுத்துவந்த யூசுப்பதான், டென்டோசற், சகிப் அல் ஹசன் கைகொடுக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இருபது ஓவர்களில் 07 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டென்டோஸட் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் (06 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் உள்பட) 70 ஓட்டங்களையும், யூசுப்பதான் 24 பந்துகளில் (03 பவுண்டரிகள்) உள்பட) 26 ஓட்டங்களையும் சகிப் அல் ஹசன் 16 பந்துகளில் (04 பவுண்டரிகள் உள்பட) 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முனாப் பட்டேல் 03 விக்கெட்டுக்களையும், குல்கர்னி, ஹர்பஜன்சிங், மலிங்க தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 148 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பிலிசாட்- டெண்டுல்கர் ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் பிலிசாட் 30 பந்துகளில் (07 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் உள்பட) 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்துவந்த ரோகித் சர்மா பூச்சியத்துடன் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கர் 28 பந்துகளில் (06 பவுண்டரிகள் உள்பட) 36 ஓட்டங்களுடனும், ராயுடு 12 ஓட்டங்களுடனும் பொல்லார்ட் 03, சுமன் 02 ஓட்டங்களுடன் ஆட்டமிழுந்தனர்.

எனினும் பிராங்லின் சிறப்பாக ஆடி ஆறுதலளித்தார்.


ஆட்டத்தின் கடைசி ஓவரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு 07 ஓட்டங்கள் தேவை. சகிப் அல் ஹசன் வீசிய இந்த ஓவரில் முதல் பந்தில் பிராங்லின் ஒரு ஓட்டத்தை எடுத்தார்.

அடுத்த பந்தை எதிர்கொண்ட ஹர்பஜன் சிங் சிக்ஸர் விளாச மும்பை இந்தியன்ஸ் அணி 19.2 ஓவர்களில் 06 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களைக் குவித்து 04 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி இரண்டாவது தகுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

சென்னையில் நாளை நடைபெறும் இரண்டாவது தகுதிச் சுற்றில் மும்பை இந்தியன்ஸ் அணி பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

துடுப்பாட்டத்தில் பிராங்லின் 25 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 29 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 5 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸ்சர் உட்பட) 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமால் எடுத்தனர்.



பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக சகிப் அல் ஹசன், ஜக் கலிஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த முனாப் பட்டேல் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இப் போட்டியில் தோல்வியடைந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு இம்முறையும் சம்பியன் கனவு தகர்ந்தது.

ஐ.பி.எல்.தொடரில் முதன் முறையாக இரண்டாவது சுற்றுக்கு முன்னேறிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஏமாற்றத்துடன் விடை பெற்றது.

## இலங்கை - இங்கிலாந்து மோதும் முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்

(லண்டன்)

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று கார்டிப்பில் ஆரம்பமாகிறது.

மூன்றுடெஸ்ட்போட்டிகள்கொண்ட தொடரில் பங்கேற்க இலங்கை அணி இங்கிலாந்து சென்றுள்ளது. முதல் டெஸ்ட் இன்று கார்டிப் நகரில் ஆரம்பமாகிறது.

இதற்கு முன்னதாக நடந்த மிடில்சக்ஸ், இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு எதிரான பயிற்சி போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்ற உற்சாகத்தில் உள்ளது.

அதேநேரம் முதன்முதலாக அணித்தலைவர் பொறுப்புடன் களமிறங்கும் டில்ஷானுக்கு வேகப் பந்து வீச்சாளர் மலிங்க இல்லாதது பலவீனம்தான்.

தவிர மற்ற பந்துவீச்சாளர்களும் காயத்தால் அவதிப்படுவது ஸ்ரொரஸ் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கு சாதகமாக உள்ளது.

## பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்
## இவானோவிக் அதிர்ச்சித் தோல்வி

(பரிஸ்)

பிரெஞ்ச் ஓபன் டெனிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் செர்பிய வீராங்கனை இவானோவிக் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். சுவீடன் வீராங்கனை ஜோகனா லாரிசனிடம் 7-6(3), 0-6, 6-2, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்து வீராங்கனை சினைடர் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். மற்றப் போட்டிகளில் ஜெர்மிலா கட்சோவா, ஷரபோவா, கிளைஸ்டர்ஸ், நா லீ, விக்டோரியா அசரன்கா, வானியா கிங் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடால் சிம்சன், ஆண்டிமுரே, சோடர்லிங் ஆகியோர் வெற்றிபெற்று



அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். இந்தியாவின் சோம்தேவ் தேவ் வர்மன் முதல் சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார்.

இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா- ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி 7-6(2), 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் வெரா- மெக்ரோவா ஜோடியை வீழ்த்தி 2-வது சுற்றுக்கு முன்னேறியது.

## துளித்துளியாய்...

**ஒட்டோகிராப் கார்**
**ரூ.30 இலட்சம்**

ஐ.பி.எல் நான்காவது தொடரில் விளையாடும் தலைவர்கள் அனைவரும் கையெழுத்திட்ட கார் ஏலம் விடப்பட்டது. இந்த ஏலத்தில் 26 பேர் பங்கேற்றனர். முடிபில் ரூபாய் 30.13 இலட்சத்திற்கு (இந்திய ரூபாயில்) ஏலம் இடப்பட்டது. இந்த ஏலத் தொகை இந்தியாவில் டபிள்யூ.டபிள்யூ.எவ் இந்தியா அமைப்புக்கு நலத்திட்ட நிதியாக வழங்கப்படும்.

**சானியாவுக்கு பாகிஸ்தானில் மவுசு**

இந்தியாவில் பிறந்த சானியா மிர்சா பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொயிப் மலிக்கை திருமணம் செய்துகொண்டார். இதனால் அங்கு அவரது மதிப்பு உயர்ந்துள்ளது. மதிப்புமிக்க நூறு பெண்மணிகள் பட்டியலில் சானியா பெயரையும் சேர்த்துள்ளனர். இதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

**இலங்கைக்கு திடீர் பின்னடைவு**

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் விளையாடத் தயாராகி வரும் நேரத்தில் இலங்கை அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இலங்கை அணியின் பந்துவீச்சாளர் நியூமன் பிரதீப்புக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அவர் அவசரமாக நாடுதிரும்புகிறார். இவருக்குப் பதிலாக அணியின் சகலதுறை வீரர் மகரூப் சேர்க்கப்பட்டுள்ளார்.

# கே.பி. உட்பட 13 பேரை...

ஆட்லறிகள், ரேடர்கள் போன்ற ஆயுதங்களை கொள்வனவு செய்திருந்தனர்.

இவரது மடிக் கணனியில், 20 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான முன்னுரிமைப் பட்டியல் ஒன்றை அமெரிக்காவின் சமஷ்டி புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் கண்டு பிடித்திருந்தனர்.

இந்தப் பட்டியலில் ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் டொலர் பெறுமதியான 25 மி.மீ. விமான எதிர்ப்பு பீரங்கிகள் 6, ஒவ்வொன்றும் 30 ஆயிரம் டொலர் பெறுமதியான ரைப்-69 ரகத்தைச் சேர்ந்த இரட்டைக் குழல் 30 மி.மீ. கடற்படை பீரங்கிகள் 6, ஆயிரக் கணக்கான தன்னியக்கத் துப்பாக்கிகள், மில்லியன் கணக்கான ரவைகள், கிரனேட் செலுத்திகள், 50 தொன் சி-4 வெடிமருந்து, 5 தொன் ஆர்டிஎக்ஸ் வெடிபொருள்கள், 50 தொன் ரிஎண்ரி சீன வெடிபொருள், விமானக் குண்டுகளுக்கு பயன்படுத்தும் 50 தொன் ட்ரை ரோனல் வெடிபொருள் ஆகியவை இருந்ததாக அமெரிக்காவின் சமஷ்டி புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்தில் உள்ள இராமச்சந்திரன் என்பவர் இந்த ஆயுதக் கொள்வனவுகளுடன் தொடர்பு பட்டுள்ளதாக பிரதீபனின் மடிக்கணனியில் இருந்த தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதையடுத்து நெதர்லாந்து விசாரணைக் குழுவொன்று நேற்று ஒஸ்லோவுக்கு சென்றுள்ளது.

சந்தேக நபர்களின் சட்டவாளர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் நெடியவனிடம் விசாரணை நடத்தவே ஒஸ்லோ செல்லவுள்ளனர்.

இவர் விடுதலைப் புலிகளுக்கு மில்லியன் கணக்கான டொலர் பணத்தை வழங்கியதாக நெதர்லாந்து அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஒப்பரேசன் கொனின்க் என்ற பெயரில் நெதர்லாந்து அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் இந்த நிதி வலையமைப்பு மீதான நடவடிக்கையே மேற்கொண்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையில் நெதர்லாந்தில் 90 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

டசின் கணக்காக வீடுகளில் நடத்தப்பட்ட தேடுதல்களில் கணனிகள், இறுவட்டுக்கள், ஆவணங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் நெதர்லாந்து வானொலி தகவல் வெளியிட்டுள்ளது. (ச-5)

# 'இராணுவ மயப்படுத்...

வன்னியில் தமிழ் மக்கள் படும் பெரும் துயரை நான் நன்கு அறிவேன். அந்தமக்களின் வாழ்விற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் கூட இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது அங்கிருந்த மக்களின் சரியான எண்ணிக்கையை ஜனாதிபதியிடம் நான் பகிரங்கமாக கூறினேன்.

அன்று நான் மௌனமாக இருந்திருந்தால் அதன் விளைவு என்னவாக இருந்திருக்கும் என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்வர்.

இப்போது நாடு இராணுவ மயப் படுத்தப்பட்டு வருகின்றது. என்னைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதற்கு அப்பால், இராணுவ மயப்படுத்தல் என்பது பேராபத்தானதாக அமையும்.

இது தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகள் மௌனம் சாதித்தால் நிலைமை மிகவும் மோசமாகும்.

வன்னி யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்திலிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முக்கியமான கடிதங்களை எழுதியுள்ளேன்.

அந்த கடிதங்களில் குறிப்பிட்டுள்ள அத்தனை விடயங்களும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தொனிக்கின்றன.

அன்று உரியவர்கள் எனது கடிதத்தின் மெய்ப்பொருளை சரியான முறையில் உணர்ந்திருந்தால், தமிழ் மக்களுக்கு இத்துணை அழிவுகள் ஏற்பட்டிருக்க மாட்டாது. மாறாக தமிழர்கள் இறைமையோடு வாழும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

விடுதலைப்புலிகள் யாரை நம்பக் கூடாதோ அவர்களை நம்பினார்கள். அதனாலேயே அவர்களுக்கு இக்கதி ஏற்பட்டது.

இப்போதாவது தமிழ் மக்கள் ஆழமாக சிந்தித்து தமிழ் அரசியல் தலைமைகளைஓரணியில் இணைக்க முன்வரவேண்டும்.

இல்லையேல் எங்கள் இனத்தின் எதிர்காலம் மிகப்பயங்கரமானதாக அமையும். இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார். (ந)

# பாதுகா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது இவ்விடயம் தொடர்பிலான கலந்துரையாடல்கள் நடைபெறாது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகள் பின்னர் தருஸ்மான் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஆராய்ந்து வருகிறார்.

அத்துடன் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தின் பதிலை ஐக்கிய நாடுகள் அமைப்பு எதிர்பார்த்திருப்பதாகவும் மார்டின் நெசர்க்கி கருத்து வெளியிட்டுள்ளார். (ச-5)

# வெள்ளைக்கொடி...

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நான்காவது நாளாக சரத் பொன்சேகா சாட்சியம் அளித்தார்.

தன்னை நேர்காணல் செய்யும் போது பெட்ரிக்கா ஜேன்ஸின் கையில் குறிப்பு புத்தகம் எதுவும் இருக்கவில்லை எனவும் நேர்காணலின் பின்னரே தன்னைப் பழிவாங்கவென குறிப்பு புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

மேலும் வெள்ளைக் கொடியேந்தி வந்த புலிகளின் தலைவர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கூறியதான ஒரு வசனத்தை தான் ஒரு போதும் பெட்ரிகா ஜேன்ஸிடம் கூறவில்லை என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

எனினும் நேர்காணல் முடிந்ததும் வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி தன்னிடம் கேள்வி எழுப்பப்பட்டதாகவும் ஊடகவியலாளர் மூலமே தானும் அப்படியொரு தகவலை அறிந்து கொண்டதாகவும் கூறியதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் யுத்தகாலத்தின் போது தனது அனுமதியின்றி பாதுகாப்புச் செயலாளர் ஆயுதங்களை கொள்வனவு செய்ததாகவும் ஜனாதிபதி தன்னை தூற்றும் வகையில் பேசியதாகவும் தெரிவித்த சரத் பொன்சேகா, அரசியலுக்கு வரும் எண்ணம் கொண்டிராத தான் மோசடி அரசியல்வாதிகளிடமிருந்து மக்களை மீட்டெடுக்கும் நோக்கில் அரசியலுக்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளைக் கொடிவிவகார வழக்கு இன்று காலை 11 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச-5)


## பகுதி நேர வேலைவாய்ப்பு

**வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 45 வருடங்களாக சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற வாய்ப்பு.**

- 2 வார பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள் : யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

### அடிப்படைத் தகைமைகள்:-

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18-55 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 05.06.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல.4996
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை , பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(4996)



## ஈராண்டு கழிந்த பின்னும் ஈரமாய் உங்கள் நினைவில்...

அமரர்

## வருணர் சுப்பிரமணியம்

(6ஆம் வட்டாரம் குமுழமுனை, முள்ளியவளை)



திதி: நவமி (26.05.2011)

*அன்போடு எமை வளர்த்து*
*நாம் இன்று-தரணியில்*
*பேர் சொல்லும் பிள்ளைகளாய்*
*ஆளாகி நிற்கையிலே*
*கனவுகளைச் சுமந்து*
*நின்ற நீங்கள்*
*எமைப் பிரிந்து சென்றீர்களோ*
*உங்கள் கனவுகளை நனவாக்கி*
*என்றும் நாம் வாழ்க்கையிலே*
*உங்கள் நினைவுகளே*
*எம்மை வழி நடத்தும்*
*ஈராண்டு கழிந்தபோதும்*
*உங்கள் நினைவுகள்*
*ஈரமாய் என்றும் நிலைத்து நிற்கும்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

**அன்னை மடியில் 03.08.1934**

**இறைவன் அடியில் 01.06.2009**

**உங்கள் நினைவில்,**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

**சு.பொன்திவாகரன்**
**80/3, சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(5013)



## அச்சக உரிமையாளர்களே!

30 ஏ நிமிடத்தில்

யாழ் நகரிலேயே முதல் முறையாக

Positive இல்லாமலே Computer ல் இருந்து

நேரடியாக Plate செய்து தரப்படும்



Positive தேவை இல்லை! Colour Seperation அவசியமில்லை!!

கொழும்பு செல்லும் தேவை இல்லை! Planing செய்யும் நேரமும் மீதம்!

GTO, KORA, KORD, KORS போன்ற எல்லா அளவுகளிலும்

**Konica CTP Printers**

158, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 4909, 0772349933


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.